விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 17 வெள்ளிக்கிழமை (03.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 349

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

# லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக 3 இடங்களில் நேற்று ஆர்ப்பாட்டம்

## 50 ஆயிரம் பேர் திரண்டதாக தகவல்

(லண்டன்)

லண்டனில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக நேற்று மூன்று இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளன. ஜனாதிபதி தங்கியிருந்த ஹோட்டல், இலங்கை தூதரகம் மற்றும் விமான நிலையம் என்பவற்றுக்கு முன்பாகவே இவ் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது. *(20ஆம் பக்கம் பார்க்க)*

## இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் விபரங்கள் நேற்று வெளியானது

(திருகோணமலை)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் வருடாந்த இடமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்களின் விபரமும் நேற்று வெளியிடப்பட்டது.

இதற்கமைவாக 2011ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் இடமாற்றம் வழங்கப்பட்ட கல்வி வலயத்தில் புதிய பாடசாலையில் ஆசிரியர்கள் கடமையைப் பொறுப்பேற்க வேண்டுமென வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். *(20ஆம் பக்கம் பார்க்க)*

☞ உள்ளே

இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் விபரம்

# இலங்கை போர் குற்றங்களுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு

## அமெரிக்கா நம்புவதாக விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான படுகொலைகளுக்கு அரசாங்கமே பொறுப்புபென அமெரிக்க ராஜதந்திரிகள் நம்புவதாக அண்மையில் வெளியிடப்பட்ட விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவித்ததாவது, இவ்வருடம் ஜனவரி 15 ஆம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்கதூதுவர்பற்றிசியாபுட்னிஸ்அனுப்பி வைத்த தகவல்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## 'இத்தாலியில் இருந்தேன்' ஜயலத் எம்.பி. அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம் செய்யும்போது தான் இத்தாலியில் இருந்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் மேற்கொள் ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஜயலத் எம்.பி. கலந்து கொண்டதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா *(20ஆம் பக்கம் பார்க்க)*

# புலிகளின் தளபதி ரமேஸ் விசாரணைக்கு உட்பட்டார்

## வீடியோ ஆதாரம் வெளியானது

(லண்டன்)

மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் ரமேஸ் வன்னியில் கடந்த வருடம் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின் போது கைது செய்யப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என நம்புவதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக பிரித்தானியாவின் ரெலிகிராப், இன்டிப்பென்டன் ஆகிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

வன்னியில் கடந்த வருடம் மேற்கொள் ளப்பட்ட யுத்த நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் சர்வதேச *(20ஆம் பக்கம் பார்க்க)*

# லியாம் பொக்ஸ்-ஜனாதிபதி லண்டனில் சந்தித்துப் பேச்சு

(லண்டன்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுடனான அதிகாரப்பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரித்தானிய அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இங்கிலாந்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதிக்கும் பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் கலாநிதி லியாம் பொக்ஸ்ஸுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதன்போது அதிகாரப்பகிர்வு நடவடிக்கைகள் மற்றும் பிரித்தானியாவின் இலங்கைக்கான உதவிகள் குறித்தும் பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது அதிகார பகிர்வு தொடர்பில் பிரித்தானிய தரப்பில் முன்வைக்கப்பட்ட யோசனைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதாக லண்டன் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன் போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அதிகார *(20ஆம் பக்கம் பார்க்க)*

## இரணைமடுவில் ஐந்து பேர் கைது

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்தில் நன்னீர் மீன் பிடிப்பதற்காக சென்ற சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் அப் பகுதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மீன் பிடிப்பதற்காக சென்றவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் *(20ஆம் பக்கம் பார்க்க)*

# பிரிட்டனில் இடம்பெறும் ஆர்ப்பாட்டம் அந்நாட்டு மக்களுக்கான அச்சுறுத்தல்



## அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் முழக்கம்

(கொழும்பு)

பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆர்ப்பாட்டம் இலங்கை அரசுக்கோ இலங்கை மக்களுக்கோ விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் அல்ல.

இது பிரிட்டனில் வாழும் ஒரு கௌரவமான மக்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் என அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார். அங்கு நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒக்ஸ்போர்ட் பல் *(20ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் ஒக்ஸ்போர்ட் உரை நிறுத்தம் பின்னணியில் பிரித்தானிய அரசாங்கம்

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

(லண்டன்)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் ஆற்றவிருந்த உரையை இரத்துச் செய்ததன் பின்னணியில் பிரித்தானிய அரசாங்கமே செயற்பட்டுள்ளதாக அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பிரித்தானியாவும் அமெரிக்காவும் இலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மையைக் குறைக்க முயற்சிப்பதுடன் சுதந்திரத்திற்கு முன்னர் இருந்தது போன்றே இலங்கை பிரித்தானியாவின் கால்களைவருட வேண்டும் என்று நினைப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யுத்தம் நடைபெற்றபோது இலங்கைக்கு பல நாடுகளில் இருந்தும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இராஜதந்திரிகள் என்ற போர்வையில் வருகைதந்த போதும் அவர்களை நாட்டுக்குள் வருவதற்கு அனுமதித்த இலங்கை அரசு அவர்களை இராஜதந்திர முறையில் வரவேற்று நெருக்கடியான மற்றும் பதற்றமான பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்றது.

வேறு நாட்டு இராஜதந்திரிகள் பிரித்தானியாவிற்கு சென்றபோது பாதுகாப்பு வழங்க பிரித்தானியாவால் முடியவில்லை. இலங்கை ஜனாதிபதிக்கு பிரித்தானியாவில் பாதுகாப்பை வழங்க முடியாமைக்காக பிரித்தானியாவை வீழ்ச்சியடைந்த, வங்குரோத்தடைந்த ஒரு நாடாகவே கருத வேண்டும். அது மாத்திரமன்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஆற்றவிருந்த உரையை இரத்துச் செய்ததன் பின்னணியிலும் பிரித்தானிய அரசாங்கமே செயற்படுவதாகவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

இதேவேளை பிரித்தானியாவை மையமாகக் கொண்டு இயங்கும் ஊடகங்களே அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு உயிரூட்ட முயற்சிப்பதாகக் குறிப்பிடும் அவர், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு பிரித்தானிய அரசாங்கம் முழு அளவில் ஆதரவு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



அத்துடன் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக பிரித்தானியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களும் நடவடிக்கைகளும் இலங்கைஜனாதிபதியைபழிவாங்கும் செயல் அல்ல எனக் குறிப்பிடும் விமல் வீரவன்ச இது முழுமையாக இலங்கை நாட்டையே பழிவாங்கும் செயல் எனவும் வர்ணித்துள்ளார். (ச-5,7)

## ஜனாதிபதியின் உரை ரத்துக்கு தொடர்பில்லை - பிரிட்டன்

ஜனாதிபதியின் உரை ரத்துச் செய்யப்பட்டமைக்கும் தமக்கும் தொடர்பில்லை என பிரித்தானியா அறிவித்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆற்றவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்ட சம்பவத்திற்கும் அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாதென பிரித்தானியா சுட்டிக்காட்டியுள்ளது.

பிரித்தானிய அரசாங்கம் இந்த உரையை ஏற்பாடு செய்யவுமில்லை எனவும் இரத்துச் செய்யவுமில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் ஒன்றியம் மற்றும் லண்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஆகியன கூட்டாக இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன.

ஒக்ஸ்போர்ட் ஒன்றியமும் பொலிஸாரும் இணைந்தே தீர்மானம் எடுத்துள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (ச-5)

## கோட்டக்கல்வி அலுவலக திறப்பு விழா

காரைநகர் கோட்டக்கல்வி அலுவலக திறப்பு விழா நிகழ்வு நாளை மறுதினம் நண்பகல் 12 மணியளவில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணன்தலைமையில்இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-7)






# தேர்தல் வெற்றிக்கு இலங்கை விவகாரம் மிலிபான்ட் பயன்படுத்திக்கொண்டார்

## ஆதாரப்படுத்துகிறது விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

கடந்த வருடம் இலங்கையில் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்ட போது உதவிகள் மற்றும் மனித உரிமைகள் குறித்து பிரிட்டனின் முன்னாள் வெளி விவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட் மேற்கொண்ட பிரசாரங்கள் அதிகமாக தேர்தல் அரசியல் கணிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதென பிரித்தானிய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாக விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவலொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கசிவிடப்பட்டுள்ள லண்டனிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் கேபிள் (தகவல் குறிப்பு) ஒன்றின்படி பிரித்தானிய வெளியுறவு அமைச்சில் இலங்கை தொடர்பான குழுவின் தலைவரான ரிம் வைட் இக்கருத்தைக் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தொடர்பான பிரித்தானிய அரசாங்கத்தினதும் அமைச்சின் கவனமும் ஐக்கிய இராட்சியத்திலுள்ள பெரும் எண்ணிக்கையான புலம்பெயர் தமிழ் மக்கள் காரணமானவை. 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலுள்ள இம்மக்கள் நாடாளுமன்றத்திற்கு முன்னால் ஏப்பிரல் 6 ஆம் திகதியிலிருந்துஆர்ப்பாட்டம் மேற்கொள்கின்றனர் எனபிரிட்டனிலுள்ள அமெரிக்க தூதரக அதிகாரி ரிச்சர்ட் மில்ஸ் தகவலொன்றை அனுப்பியுள்ளார்.

தேர்தல் நெருங்கும் நிலையிலும் தொழிற்கட்சியினர் சொற்ப பெரும்பான்மையில் உள்ள தொகுதிகளில் பல தமிழர்கள் வசிப்பதாலும் அரசாங்கம் இலங்கை குறித்து கவனம் செலுத்துகிறது.

அதேவேளை யில் தான் 60 சதவீதமான நேரத்தை இலங்கை தொடர்பாக மிலிபான்ட் வைட்டிடம் தெரிவித்துள்ளார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)


அன்றும் சரி இன்றும் சரி என்றும் சரி வாடிக்கையாளரின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனம்

நல்லூர் சரவணா ரெக்ஸ்

தனது புத்தம் புதிய கிளையை இலக்கம் 770, 772 கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தி எனும் முகவரியில் ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.



நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு புத்தம் புதிய தெரிவில் புதிய டிசைனில் புதுப்பொலிவு கொண்ட

எமது வியாபார நிறுவனத்தில் 2011 ஆம் ஆண்டிற்கான புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சிறுவர், சிறுமிகள், ஆண்கள், பெண்கள் என அனைவரது ஆடைத் தெரிவிற்கும் ஒரே இடம்

ஏழு நாட்களும் கடை திறந்திருக்கும்

நல்லூர்
சரவணா ரெக்ஸ்
770, 772 கே.கே.எஸ்.வீதி,
தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.
021 222 0421

முகவரியை மறந்து விடாதீர்கள்

(க-1721)



## மலிவான விலையில் தரமான நூல்கள்

**வே.நவமோகனின் புலமைப் பரிசில் நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| ❖ அமுதசுரபி | 200/= | ❖ விடிவெள்ளி | 225/= |
| ❖ வெற்றிமுரசு | 225/= | ❖ புலமைப்பரிசில் வழிகாட்டி (யாழ்வட்டம்) | 200/= |

**சிங்களம் கற்பதற்கான நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| ❖ மும்மொழி வழிகாட்டி – 1 | 75/= | ❖ மும்மொழி வழிகாட்டி – 2 | 75/= |
| ❖ தமிழ் மூலம் சிங்களம் | 120/= | ❖ சிங்களம் படிப்போம் | 100/= |

**மொழி விருத்திக்கான நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| ❖ பாஷைப்பயிற்சி 1,2,3,4 | 75/= | ❖ மொழித்திறன் | 75/= |
| ❖ உறுப்பெழுத்து வழிகாட்டி (1-4) | 75/= | ❖ சொற்களஞ்சியம் | 75/= |
| ❖ உறுப்பெழுத்துப் பயிற்சி | 80/= | ❖ வாக்கியப்பேழை | 55/= |

**கட்டுரை நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| ❖ புலமைக்கட்டுரை | 75/= | ❖ கட்டுரைவளம் | 85/= |
| ❖ கட்டுரைக்கனி | 150/= | ❖ கட்டுரைச் சுரங்கம் | 75/= |
| ❖ Children Essay | 75/= | ❖ Essay Writing | 75/= |
| ❖ வெற்றிக்கனி | 140/= | ❖ கணினி வழிகாட்டி 1-6 | 75/= |
| ❖ பழமொழிகள் (2000) | 150/= | ❖ விடுகதைகள் (1500) | 150/= |

நாடெங்கிலும் உள்ள புத்தகசாலைகளில் கிடைக்கும்
யாழ் நகரில் அன்னை புத்தகசாலையில் மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**காயத்திரி பப்ளிகேஷன்**
9-1/1 சிறி சரணங்கரா றோட், பாமன்கடை தெஹிவளை
077 7892028 011 2727621

(க-1722)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## விதியின் பயன்

நாம் எது நடக்க வேண்டுமென்று நினைக்கின்றோமோ அது நடப்பதில்லை எது நடக்கக் கூடாதென்று நினைக்கிறோமோ அது நடந்து விடும். இதற்கு எதைக் காரணமாகச் சொல்வது?

இதைத்தான் சிலர் விதியென்று சொல்கிறார்கள். விருப்பத்துக்கு மாறாக நடந்தால் அதை நாம் 'விதி' என்று மிகவும் சுலபமாக சொல்லிவிடுவோம்.

ஒரு சமயம் தேவலோகத்தில் நாராயணனும் இலட்சுமி தேவியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். பூலோகத்தில் நடப்பவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் இங்கே ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். சாப்பாடு கிடைத்ததும் அதை எடுத்துக் கொண்டு ஒரு தனியிடத்துக்குப் போனான். சாப்பிடுவதற்கு முன் கடவுளை நினைத்தான். 'நாராயணா,நாரயணா' என்று நிவேதனம்செய்துவிட்டு சாப்பிட ஆரம்பித்தான். தேவலோகத்தில் இருந்த இலட்சுமி தேவி இதைப் பார்த்தார். உடனே நாராயணனிடம் சொன்னார்.

''அதோ பார்த்தீர்களா? உங்களுடைய பக்தன் தினமும் பிச்சையெடுத்துவரும் சாப்பாட்டை முதலில் உங்களுக்கு அர்ப்பணித்துவிட்டுத்தான் சாப்பிடுகிறான். அப்படிப்பட்ட உங்களுடைய பக்தனை பிச்சை எடுக்க விட்டிருக்கிறீர்கள்... இது நியாயமா? அவனுக்குக் கொஞ்சம் செல்வத்தைக் கொடுத்து வசதியாக வாழவைக்கக் கூடாதா?'' என்று கேட்டார். நாரயணன் சிரித்தார். அதன் பின் சொன்னார்:

''இவன் போன பிறவியில் செல்வந்தனாகத்தான் இருந்தான். அப்படி இருந்தும் இவன் யாருக்கும் எதுவும் கொடுக்கவில்லை. ஏழைகளுக்கு தானதருமம் எதுவும் செய்யவில்லை. அதனால் தான் இந்தப் பிறவியில் கஷ்டத்தை அனுபவிக்கிறான். அது அவனுடைய விதியின் பயன்'' என்றார் கடவுள். ஆனால் அதை இலட்சுமிதேவி ஏற்றுக் கொள்ளவில்லை.

''என்ன சொல்றீங்க? விதியாவது ஒன்றாவது... நாம் நினைத்தால் முடியாதது ஒன்றுண்டா? இப்பொழுது நான் அவனுக்கு உதவி செய்யப் போகிறேன்'' என்றார்.

''என்ன செய்யப் போகிறாய்?'' என்றார் அவர்.

''அவனுக்குக் கொஞ்சம் செல்வம் கொடுத்து அவனை கஷ்டத்திலிருந்து காப்பாற்றப் போகிறேன்'' என்றார்.

''சரி... செய்துபார்'' என்றார்.

உடனே இலட்சுமிதேவி ஒரு பணமுடிப்பை பூலோகத்தில் அந்தப் பிச்சைக்காரன் நடந்து வந்து கொண்டிருந்த வழியில் போட்டார். வழியில் இது கிடப்பதைப் பார்த்தால் அவன் எடுத்துக் கொள்வான் அல்லவா, அதனால்தான்.

ஆனால், அந்த நேரம் அந்தப் பிச்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? பார்வையில்லாதவர்கள் தெருவில் எப்படி நடந்து போகிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவனுக்கு ஒரு ஆசை வந்தது.

அதாவது பார்வையில்லாதவர்கள் மாதிரி எப்படி நடந்து கொள்வது என்று யோசித்து நடந்து பார்த்தான். கண்ணிரண்டையும் மூடிக் கொண்டு தட்டுத் தடுமாறு நடந்து வந்து கொண்டிருந்தான். வழியில் கிடந்த பணமுடிப்பு அவனுடைய கண்ணில் படவில்லை. அதைத் தாண்டிப் போய்விட்டான்.

பின்னால் ஒருத்தன் நடந்து வந்து கொண்டிருந்தான். அவனுடைய கண்ணில்பட்டது அந்தப் பணமுடிப்பு. அவன் அதை எடுத்துக் கொண்டு சந்தோஷமாக நடந்து சென்றான்.

இதனை தேவலோகத்திலிருந்து நாராயணனும் இலட்சுமிதேவியும் பார்த்தக்கொண்டிருந்தனர்.

''பார்த்தாயா... என்ன நடந்ததென்று... அந்த பக்தனை பணக்காரனாக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாயே... உன்னால் முடிந்ததா?'' என்றார் நாராயணன்.

''உண்மைதான் பிரபு! விதிப்படி எதுவும் நடக்கிறது என்பதை இப்பொழுது நான் ஒத்துக் கொள்கிறேன்'' என்றாராம் இலட்சுமி தேவி. இப்பொழுது இந்தக் கதையை அறிவு பூர்வமாக கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம்.

ஒரு பக்தனை பணக்காரனாக்க வேண்டுமென்று கடவுள் நினைத்தால் கூட அது முடியாது என்ற உண்மை இதற்குள் இருக்கல்லவா? அப்படியானால் அந்த விதி யாருடைய கையில் இருக்கிறது? மனிதனுடைய கையில்தான்.

அவன் நல்லவிதமாக நடந்து கொண்டால் விதியும் அவனுக்குச் சாதகமாக இருக்கும். அப்படியில்லையானால் முழித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் கண்ணை மூடியிருப்பது போலாகிவிடும்.

இந்தப் பிச்சைக்காரனுக்கு நடந்தது மாதிரி!

ஒரு சிறையில் 2 கைதிகள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

''நீ எப்படி வந்து சேர்ந்தாய்?'' என்று கேட்டான் ஒருத்தன்.

''பணமில்லை. யாரும் உதவி செய்யவில்லை. திருடினேன். அகப்பட்டுக் கொண்டேன். அதுதான் வந்து விட்டேன்'' என்றான் மற்றவன்.

''அது சரி,நீ எப்படி வந்து சேர்ந்தாய்? என்று கேட்டான் இவன்.

அதற்கு அவன் சொன்னான்.

''என்னிடமும் பணமில்லை. ஆனால் ஒரு பெரிய மனுஷன் எனக்கு உதவினார். ஒரு பெட்டி நிறையப் பணம் கொடுத்து என்னை வைத்திருக்கச் சொன்னார். அப்படியிருந்தும் நான் இங்கே வந்து விட்டேன்'' என்றான்.

''அது எப்படி?'' என்றான் அவன்.

''அதுதான் விதி. அந்தப் பெரிய மனுஷன் என்னிடம் கொடுத்தது முழுவதும் கள்ளநோட்டு'' என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## பெண்களிற்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தினை முன்னொட்டிய வீதி நாடகம்

யாழ். சமூக செயற்பாட்டு மையமானது பால், பால்நிலை அடிப்படையிலான செயற்பாடுகளை பிரதேச செயலக ரீதியாக மேற்கொண்டு வருகின்றது. தற்போது பெண்களிற்கெதிரான வன்முறைகளானது பல காரணங்களாலும் அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

அந்த வகையில் இந்நிறுவனமானது பெண்களிற்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தினை முன்னொட்டி கார்த்திகை 25 ஆம் திகதி முதல் மார்கழி 10 ஆம் திகதி வரை வீதி நாடகத்தினூடான பிரசாரம் ஒன்றினை யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி, உடுவில் , தெல்லிப்பழை, வேலணை ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 16 கிராமங்களில் நடாத்த திட்டமிட்டுள்ளது.

இவ்வீதி நாடகத்தில் பணிக்களக் கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகளே பங்கேற்கின்றனர். அத்துடன் இந் நாடகத்தினைத் தொடர்ந்து பெண்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்து பல செயற்பாடுகளும் அக்கிராமங்களில் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் உள்ள ஜே/261 பிரிவு காந்தி கிராமத்தில் உள்ள பொதுக் கிணற்றடியில் முற்பகல் 10 மணிக்கும் ஜே/ 265 பிரிவு உரும்பிராய் செல்வபுரத்தில் உள்ள பொது மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கும் ஜே/ 257 பிரிவில் இருபாலை தெற்கில் உள்ள ஆனந்தபுரம் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கும் நடைபெறவுள்ளது என அறிவிக் கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-6)

## சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வுகள்

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர் வாழ்வு நிறுவனம் நடாத்தும் சர்வதேச வலுவுள்ளோர் தினம் ''சுயாதீன மாற்றத்துக்கு உட்படுத்தல் ஊடாக வலுவிழந்தோரை வலுவூட்டல்'' எனும் தொனிப் பொருளில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில் இந்நிறுவன நிர்வாகச் செயலாளர் நா. சிவநாதன் தலைமையில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-9)

## மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

தும்பளையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்- துவிச்சக்கர வண்டி விபத்தில் இருவர் பலத்த காயங்களுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவமானது தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்திற்கருகில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்றது. இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தும்பளையைச் சேர்ந்த கணேஷ் நிசாந்தன் வயது (23) என்ற இளைஞனும் துவிச்சக்கர வண்டியில் பயணித்த அவ்விடத்தைச் சேர்ந்த திருச்செல்வம் தாமந்தி (வயது27) என்ற யுவதியும் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-3-24)

## மாணவர் கௌரவிப்பு

(அல்வாய்)

யா/வடமராட்சி இந்து மகளிர் கல் லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாண வர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பி.ப 3 மணி க்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி. செ.பாலேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ துறை தலைவர் பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் திருமதி.சீதா சண்முகநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 100 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 70 | 70 | 60 |
| கரட் | 60 | 80 | 70 |
| பூசணி | 50 | 50 | 50 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 150 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 140 |
| பாகற்காய் | 40 | 150 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 40 |
| பயற்றங்காய் | 140 | 140 | 130 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 70 | 80 | 70 |
| கறிமிளகாய் | 150 | 140 | 90 |
| முருங்கைக்காய் | 250 | -- | 200 |
| போஞ்சி | 100 | 120 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |

## இராசி பலன்

*03.12.2010*
*(கார்த்திகை 17, வெள்ளிக்கிழமை)*
*திரயோதசி பின்னிரவு 2.10 மணிவரை*
*சுவாதி முன்னிரவு 8.25 மணிவரை*
*இராகுகாலம் 10.45-12.15 மணிவரை*
*சுபநேரம் 6.15-7.45 மணிவரை*
*பிரதோச விரதம்*

**மேடம்** வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சியான செய்தி வந்து சேரும், குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், நீண்டகால நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கியமான முடிவெடுப்பீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், உதிரி வருமானங்கள் வந்து சேரும், தேகநலம் உற்சாகமாக இருக்கும்.

**மிதுனம்** பிள்ளைகளுக்காக சில செலவுகளை எதிர்கொள்ள வேண்டியேற்படலாம், மாமன், மைத்துனர் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரும்.

**கடகம்** பெற்றோரின் பாசமழையில் நனையும்நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**சிங்கம்** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள்.

**கன்னி** திறமையானவர்களின் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், புத்தி சாதுரியத்தால் சாதனை படைக்கும் நாள்.

**துலாம்** பயணத்தால் பலன் கிடைக்கும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உறவினர்களுக்கு உதவி செய்யும் மனநிலை தோன்றும், பெரியோர் சந்திப்புண்டு.

**விருச்சிகம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றிபெறும், திருமணத் தடை அகலும், ஆடம்பரப் பொருட் சேர்க்கையுண்டு, பிரயாண அலைச்சல் ஏற்படலாம்.

**தனுசு** பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், பயண வாய்ப்புக்கள் எண்ணியபடியே கைகூடும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும், கௌரவமான நிலை.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெறும், நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத வகையில் சில உதவிகள் கிடைக்கலாம், தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** தொலைபேசி வழித்தகவல் மனக் குழப்பத்தை அகற்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள்.

**மீனம்** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், பிறரது வேலைகளை நீங்கள் பொறுப்பெடுக்கும் சூழ்நிலை உருவாகலாம், பிரயாணத்தில் கவனம் தேவை.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றம்

# யாழ்.மாவட்டத்தில் இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள்

**யாழ்ப்பாண கல்வி வலயம்**

**கிளிநொச்சி**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

பி.பாலமுரளி (கோண்டாவில் ஆர்.கே. எம்.வி), திருமதி சி.உதயகலா (அரியாலை ஸ்ரீ பாரதி வித்தி),திருமதி இ.கங்கசிவம் (பெரிய புலம் ம.கா வித்தியாலயம்), செல்வி .ஜி.தங் கராஜா (ஆவரங்கால் மகாஜனா வித்தி), திருமதி ஜே.சிவோதயன் (கோண்டாவில் இந்து மகா வித்தி).

திருமதி கே. கிருஸ்ணமோகன் (கோண் டாவில் பரஞ்ஜோதி வித்தி),திருமதி எல்.கலா வர்ணன் (இளையதம்பி இந்து வித்தி, திருமதி எம்.உதயசூரியன்(உரும்பிராய் ஆர். ரி. எம். எஸ்), செல்வி .எம்.சுரேந்திரன் (செங் குந்தா இந்துக் கல்லூரி),திருமதி என் .ஞான சேகரம் (கனகரத்தினம் ம.மகா வித்தி, திருமதி முத்துலிங்கம் (சென்ஜேம்ஸ் ஆண் கள் பாடசாலை), திருமதி என் .ரவீந்திரன் (திருநெல்வேலி இ.த.க.பாடசாலை).

திருமதி என்.விமலேந்திரன் (ஆனை பந்தி எம்.எம்.ரி.எம்.எஸ்), செல்வி பி.கந் தையா (சென் சாள்ஸ் மகா வித்தி, திருமதி பி.குலசிங்கம் (சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை) செல்வி பி.சிவசித்திரா (யாழ். இந்துக் கல்லூரி), திருமதி பி.தியாகராஜா (கோண்டாவில் எச்.எம்.வி).

ஆர் .சந்திரதாஸ் (கொக்குவில் இந்துக் கல்லூரி),திருமதி ஆர்.கந்தசாமி (இளை யதம்பி எச்.வி),திருமதி ஆர்.திருக்கேதீஸ் வரன் (அச்சுவேலி சென் திரேசா பெண்கள் கல்லூரி),செல்வி ஆர்.சுப்பிரமணியம் (உரும் பிராய் சைவதமிழ் வித்தி), திருமதி எஸ்.கஜேந் திரன் (சென்சாள்ஸ் மகா வித்தி),செல்வி எஸ்.கனகரத்தினம் (கந்தர்மடம் சைவப் பிர காச வித்தி),செல்வி எஸ்.நவரட்ணம் (கொக் குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திருமதி எஸ்.பெருமாள்பிள்ளை (சென் பொஸ்கோ ஆரம்ப வித்தி, திருமதி எஸ்.சந்திரசேகரம் பிள்ளை (சுரந்தன் இரமுப்பிள்ளை வித்தி, எஸ்.துரைராஜா (கனரத்தினம் ம.மகா வித்தி),செல்வி எஸ்.விஸ்வலிங்கம் (உரும் பிராய் றோ.க.த.க . பாடசாலை),செல்வி எஸ். கனகரத்தினம் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

திருமதி எஸ்.பிரசாத் (கோண்டாவில் நம சிவாயம் வித்தி),செல்வி ரி.மார்க்கண்டு (கோண்டாவில் பரஞ்ஜோதி வித்தி),திருமதி யூ.சிவஞானம் (சென்பொஸ்கோ ஆரம்ப வித்தி, திருமதி வி.அம்பிகைபாலன் (முத் துத்தம்பி மகா வித்தி).செல்வி வி.மகேந் திரன் (நீர்வேலி றோ.க.த.க பாடசாலை).

திருமதி வி.ரவீந்திரன் (இந்துமகளிர் கல் லூரி),வி.சண்முகநாதன் (வைத்தீஸ்வராக் கல்லூரி),திருமதி வி.சிவானந்தன் (பெரிய புலம் ம.ம.வி),திருமதி வி.வீரசிங்கம் (உரும் பிராய் சைவத்தமிழ் வித்தி, திருமதி விஜய லட் சுமி (கோண்டாவில் எச்.எம்.வி).

**முல்லைத்தீவு**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

திருமதி எ.செங்கதிர்ச்செல்வன் (இந்து மக ளிர் கல்லூரி),ஜே.இராசையா (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி,திருமதி கே. ரமணன் (உரும்பிராய் சந்திரோதயா வித்தி, எம்.சிறி தரன் (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.

**துணுக்காய்**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

ஐ.குமரதாசன் (கனகரத்தினம் ம.ம. வித்தி, ஐ.சாரங்கன் (ஆவரங்கால் நடராஜா இராமலிங்கா வித்தி,கே. குமரபரன் (கோப் பாய் மகா வித்தி,கே.நித்தியானந்தன் (கோப் பாய் கிறிஸ்தவக்கல்லூரி),திருமதி எம்.மகா தேவா (இந்து மகளிர் கல்லூரி), எம்.சத்திய குமார் (பெரியபுலம் எம்.எம்.வி), பி.பாலமுரளி தரன் (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி, ஆர். ராஜ்குமார் (கோண்டாவில் எச்.எம்.வி),எஸ்.செல் வேந்திரன் (கொக்குவில் மேற்கு சி.சி.ரீ. எம். எஸ்),எஸ்.சூரியகுமார் (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி.

எஸ்.சிறிஸ்கந்தராஜா (கொக்குவில் இந் துக் கல்லூரி),எஸ்.சுதாகரன் (கோண்டாவில் இந்து மகா வித்தி),எஸ்.தவநேசன் (சென் சாள்ஸ் மகா வித்தி,எஸ்.உமாசுதன் (கொக்கு வில் இந்துக் கல்லூரி),கி.சிறிதரன் (வண் ணை வைத்தீஸ்வரா),வி.லிங்கேஸ்வரன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), வி.நகுலேஸ் வரன் (கொக்குவில் நாமகள் வித்தி).

வி.இரட்ணபாலன் (உரும்பிராய் றோ.க. த.க. பாடசாலை),வி.சங்கரராஜா (கோண்டா வில் பரஞ்ஜோதி).

**வலிகாமம் கல்வி வலயம்**

**கிளிநொச்சி**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

இ.தயாகரன் (மகாஜனாக் கல்லூரி), பி.மதனகோபாலன் (சங்கானை சைவப்பிர காச வித்தி,கே. கசுபதிராஜா(சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி),ஏ.சுரேஸ்குமார் (புதுமடம் றோ.க.த.க.பாடசாலை),பி.சிவகுமார் (வயாவி ளான் மகாவித்தி),வி.விமலன் (சைவப்பிரகாச வித்தி.

வி.உமாசுதன் (மகாஜனாக் கல்லூரி), கே.யசோதரன் (அருணோதயாக் கல்லூரி), திருமதி ஜே.திருமுருகராஜா (கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தி),கே.பாலமுருகன் (மூளாய் சைவப்பிரகாச வித்தி),செல்வி ரி.லோகநாயகி (விக்ரோறியாக் கல்லூரி), எஸ்.ஜெயகாந்தன் (ஏழாலை சைவ மகாஜ னன்).கே.யசோதரன் (அருணோதயாக் கல் லூரி), திருமதி.ஜி.ஜெயம் (சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலை),கே. செல்வராஜா (வயாவி ளான் மகாவித்தி),ஆர்.பிரேமச்சந்திரன் (கட்டு வன் புலம் மகாவித்தி),திருமதி பி.குயின்ரன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), திருமதி எஸ்.நிர் மலன் (சங்கானை சிவப்பிரகாசவித்தி, ஏ.யோ கேஸ்வரன் (அளவெட்டி சதானந்தா வித்தி.

**முல்லைத்தீவு**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

வி.முருகதாஸ் (உடுவில் முருகமூர்த்தி வித்தி), எஸ்.கௌரிதரன் (சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி), ஆர்.ராஜபாலன் (சங் கானை சிவப்பிரகாசா வித்தி, இ.அனுசாந் தன்(யூனியன் கல்லூரி), ஜே.கோகவி (சுழி புரம் வடக்கு ஆறுமுகம் வித்தி), ரி.சசிதரன் (ஆனைக்கோட்டை ஆர்.சி),எஸ்.சிவகுமாரன் (கொட்டைக்காடு அ.த. க.பா).

**துணுக்காய்**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

எஸ்.சாந்தகுமார் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), செல்வரட்ணம் பாஸ்கரன் (இணு வில் இந்துக் கல்லூரி), தில்லைநாதன் கிரி தரன் (சங்கானை சிவப்பிரகாச வித்தியால யம்), கே.கணேசதேவா (இளவாலை திருக் குடும்ப கன்னியர் மடம்), எஸ்.சிவகுமார் (கீரி மலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்), வை.சிவகோணேசலிங்கம் (வட்டு. மத்திய கல் லூரி), கே.ஆதித்தன் (ஸ்கந்தவரோதயா கல்லூரி).

**தென்மராட்சி கல்வி வலயம்**

**கிளிநொச்சி**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

திருமதி.சி.தர்மரட்ணம் (கைதடி முத்துக் குமார சுவாமி மகா வித்தியாலயம்), செல்வி ஐ.கே. யோகராணி(வரணி வடக்கு சைவப் பிர காச ம.வி), திருமதி ஜெ. சிவகுமாரன் (மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்), கே.இந்திர ராஜா (கைதடி விக்கினேஸ்வரா வித்தியால யம்).

கே.கமலநாதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திருமதி.எம்.அமிர்தலிங்கம் (உசன் இராமநாதன் ம.வி), எம்.சிறிபாஸ்கரன் (றிபேக் கல்லூரி), செல்வி.என்.உதயராணி (வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்), பி.வல் லிபுரநாதன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), ஆர்.விக்னராஜா(கைதடி விக்கினேஸ் வரா ம.வி)

எஸ்.திருச்செல்வம்(வரணி ம.வி), ரி.அற் புதராஜா (நாவற்குழி ம.வி), திருமதி.வி.சுபாஸ் சந்திர போஸ் (சாவகச்சேரி பெண்கள் கல் லூரி), ஆர்.சுப்பிரமணியம் (கைதடி முத்துக் குமாரசாமி ம.வி)

**முல்லைத்தீவு**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

எம்.திவ்யபாலன் (வரணிம.வி), ஆர்.சுதன் (கைதடி விக்கினேஸ்வரா ம.வி)

**துணுக்காய்**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

கே.சந்திரமௌலீசன் (கச்சாய் அ.த. க.பாடசாலை), பி.சந்திரமோகன் (மட்டுவில் சந்திரமௌலீசா வித்தியாலயம்), பி.கிருபா னந்தன் (நாவற்குழி ம.வி, மட்டுவில் சந்தி ரபுரம்), எஸ்.மோகனதாஸ் (ஸ்கந்தவரோதயா), வை.லிங்கேஸ்வரன் (மீசாலை விக்னேஸ் வரா ம.வி)

**வடமராட்சி கல்வி வலயம்**

**கிளிநொச்சி**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

ஏ.கோகுலராஜன் (ஹாட்லி கல்லூரி), திருமதி.ஜெ.செல்வமோகன் (ஞானசாரி யார் கல்லூரி), திருமதி ஜெ. சிவலிங்கம் (தேவரையாளி இந்துக் கல்லூரி) , திருமதி எல்.அருந்தவ செல்வம்( உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி),திருமதி பி. குழந்தை வேல் (உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி) , திரு மதி பி. சேதுபதி (இமையாணன் அ.த. க.பா).

திருமதி பி. சுரேஸ்குமார் (வல்வை சிவ குரு வித்தியாலயம்) ,திருமதி எஸ். பத்ம நாதன் (துன்னாலை மேற்கு எம்.எம் ரி.எம்.எஸ்), செல்வி எஸ். சசிகலா (உடுப் பிட்டி பெண்கள் கல்லூரி), எஸ்சிற்பரன் (நாகர் கோவில் ம.வி) .

திருமதி எஸ். சிறிபவான் (நெல்லியடி மத் திய ம.வி), செல்வி. எஸ் .சுப்பிரமணியம் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) , எஸ். தயாபரன் (ஹாட்லிக் கல்லூரி) , எஸ். துரைராஜா (புலோலி கிழக்கு அ.த.க.பா) ரி. ரமேஸ்வரன் (நெல்லியடி மத்திய ம.வி) , திருமதி ரி. தயாபரன் (வடமராட்சி இந்து பெண்கள் கல்லூரி) , திருமதி. வி.விஜயாசா (இமையாணன் அ.த.க.பா)

**முல்லைத்தீவு**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

என். நந்தன் (கொற்றாவத்தை ஏ.ரி.எம்.எஸ்),ஆர். காண்டீபன் (பொலி கண்டி எச்.ரி.எம்.எஸ்) , ஆர். சுதர்சன் (சிதம் பராக் கல்லூரி) , ஆர். ஜசோதரன் (உடுப் பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) , எஸ். முரளீதரன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) , எஸ். நாகேந்திரன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

**துணுக்காய்**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

ஏ.யோகேந்திரன் (நாகர் கோவில் ம.வி) , கே. நவநீதன் (தொண்டைமானாறு வீர கத்திப் பிள்ளை ம.வி) , ரி. சுபாஹரன் (புலோலி எம்.எம்.ரி.எம்.எஸ்), வி. ஜெகதீசன் (உடுப் பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி).

# யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள்

**யாழ்ப்பாணம்**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்.**

**கிளிநொச்சி கல்வி வலயம்**

திருமதி அனித்தா ஆறுமுகன் (கிளி நொச்சி ம.வி), செல்வி ஆன் புனித ஜெயந்தி நடராஜா (இராமநாதபுரம் சி.வி) , திருமதி அனுஷியா சுந்தர செல்வன் (வேம் பொட்டுக் கேணி (சி.சி.ரி.எம்.எஸ்),திருமதி அருந்ததி குகானந்தா (திருவையாறு ம.வி) , கிறிஸ் ரேபில் ஜஸ்ரின் ப்ரிசிலி (இந்துக் கல்லூரி) , திருமதி கலையரசி செல்வராசா (இராமநாத புரம் அ.த.க.பா) .

திருமதி கலாநாயகி இராசரட்ணம் (குறுக் காய் தீவு ம.வி), செல்வி கமலாதேவி சந்தி ரகுமார்( ஜெயபுரம் மத்திய வித்தியாலயம்), திருமதி கனகராணி பத்மநாதன் (பூநகரி ம. வி), திருமதி கனகேஸ்வரி சுந்தரமூர்த்தி (பரந்தன் இந்து ம.வி), திருமதி கிருஷ்ண வேணி திருநாவுக்கரசு (திருவையாறு ம.வி.) திருமதி கோகுலவாணி நகுலேஸ்வரன் (கனாம்பிகைக் குளம் அ.த.க.பா), திருமதி குருதா கௌரி அரங்கண்ணன் (இராமநாத புரம் ம.வி),செல்வி மகேஸ்வரி மாணிக்கவா சகம் (புனித பாத்திமா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்), ம. மாலினி மாட்டின் (புனித திரேசாள் கல்லூரி), திருமதி இ.மதிவதனா சிவாநந்தன் (கனகபுரம் ம.வி), திருமதி நளினி இரவீந்திரன் (புனித திரேசாள் பெண் கள் கல்லூரி).

திருமதி .புஸ்பநாயகி திரவியசெல்வம் (புனித பாத்திமா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), செல்வி புஸ்பராணி பால கிருஷ்ணன் (கனகபுரம் ம.வி),திருமதி இராகினி குமாரசாமி (பூநகரி சிறி விக்னேஸ் வரா வித்தியாலயம்), அமிர்தா அன்ரன் தேவ ராஜா (கிளிநொச்சி ம.வி), எஸ். லோகேந்திரன் (கனகாம்பிகைக் குளம் அரசினர் த.க.பா), திருமதி எஸ். சிவநாதன் (ஞானிமடம் றோ மன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை).

திருமதி சஜிஜனன் சுதாகர் (வேம் பொட்டுக் கேணி(சி.சி.ரி.எம்.எஸ்), திருமதி சந்தான லட் சுமி மனோறஞ்சிதம் (கல்மடுநகர் அ.த.க.பா), திருமதி சரஸ்வதி இராசநாயகம் (குறுக்காய் தீவு ம.வி), திருமதி ... (இராமநாதபுரம் ம.வி), செல்லத்துரை விக் னேஸ்வரநாதன் (கிளி.பன்னக்கண்டி அ.த. க.பா) , செல்வராணி இரமேஸ்குமார் (திருவை யாறு.ம.வி).

திருமதி சாந்தினி குகநாதன் (மாயவனூர் அ.த.க.பா), திருமதி. ஷியாமளா மகேந்திரன் (பாரதி வித்தியாலயம்), திருமதி சோமினா அர விந்தன் (பளை மத்திய வித்தியாலயம்).

செல்வி தர்ம மாலினி நடராஜா (குமார சாமி புரம் அ.த.க.பா), திருமதி திருமகள் லோகேஸ் வரன் (இராமநாதபுரம் மத்திய வித்தியாலயம்), திருமதி வசந்தமலர் பத்மநந்தன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), திருமதி வாசுகி சுதாகரன் (புதுமுறிப்பு விக்கினேஸ்வரா), செல்வி வை. இருதயராஜா (நாச்சிக்குடா அ.த.க.)

**மடு கல்வி வலயம்**

செல்வி ஜி. நடராஜா (பருப்பு கடந்தான் அ.த.க).

**மன்னார் கல்வி வலயம்**

கே. சண்முகநாதன் (அல் அசார். மகா வித்தி), எம். கணேஷானந்தன் (சென். சேவி யர் பெண்கள் கல்லூரி), திருமதி எம். மனோ கரன் (கற்கிடான்தகுளம் றோ. க.த.க).

**முல்லைத்தீவு கல்வி வலயம்**

திருமதி அ. சிறிகாந்தன்(வள்ளிபுனம் ஜே.எஸ்.வி), திருமதி பி.சிவாகரன் (மாமூனை அ.த.க), திருமதி டி.தேவகுமார் (வற்றாப் பளை மகா வித்தி), திருமதி ஜே. மதிவண் ணன் (விஸ்வமடு மகா வித்தி), திருமதி கே.நந்தகுமார் (வள்ளிபுனம் யூ. எச்.வி) , திருமதி மேரி. எஸ். ஆர். செபஸ்தியான் (வேனா வில் சிறி முருகானந்தா வித்தி, திருமதி.என். குகராசா (விஸ்வமடு மகா வித்தி), செல்வி பி.மரியநாயகம் (தேரசன் கண்டல் அ.த.க), திருமதி பி. இராஜசேகர் (விஸ்வமடு மகா வித்தி. திருமதி ஆர்.மதனராஜா (தேவி புரம் அ.த.க), திருமதி எஸ். கமலகாந்தன் (முல்லை. மகா வித்தி, திருமதி எஸ். ஜெய ரூபன் (தேவிபுரம் அத.க.), செல்வி எஸ். முத் துலிங்கம் (புதுக்குடியிருப்பு மத்திய கல் லூரி), திருமதி.யூ. தமிழ்மாறன் (உடையார் கட்டு ம.வி.)

(18ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண மாற்று வலுவுடையோர் தினம் அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வட மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-என்.குமார்)

# சமுர்த்தி திரியபியச திட்டத்தின் கீழ் வீடு புனரமைக்க நிதி ஒதுக்கீடு

(கொழும்புத்துறை)

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி திரிய பியச வீட்டுத்திட்டத்தின் கீழ் ஆறு பயனாளிகளுக்கு வீடு புனரமைப்பதற்கான தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கமநெகும கிராமங்களில் உள்ள கிராம சேவகர் பிரிவுகளில் தலா ஒவ்வொரு வீடுகள் வீதம் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

# வடக்கு காணி உரிமையாளர்களை இனங்காணும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கு காணி உரிமையாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் காணி உரிமையாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்தியாவின் அனுசரணையுடன் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் இந்த வீடுகளை கட்டும் காணிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் சில காணி உரிமையாளர்கள் நீண்டகாலமாக அந்தப்பிரதேசங்களுக்குசெல்லவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


## முக்கிய அறிவித்தல்
### யாழ். போதனா வைத்தியசாலையை நாடும் பொதுமக்கள் கவனத்திற்கு

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய கட்டட நிர்மாண வேலைகளும் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் வாகனத் தரிப்பிடங்களும் சில விடுதிகளும் அகற்றப்பட்டு மாற்றிடங்களில் இயங்க வைக்கப்பட்டுள்ளது. எனவே ஏற்பட்டுள்ள இட நெருக்கடியையும் போக்குவரத்து நெரிசலையும் குறைக்கும் முகமாக எதிர்வரும் 05.12.2010 தொடக்கம் வைத்தியசாலை நிர்வாகத்தால் பின்வரும் நடைமுறைகள் கையாளப்படவுள்ளன.

1. பார்வையாளர்கள் வைத்தியசாலை வளாகத்துக்குள் உட்செல்லும், வெளிச் செல்லும் வாசலாக வைத்தியசாலையின் பின்புறமாகவுள்ள மணிக்கூட்டுக் கோபுர வீதியும் மின்சாரநிலைய வீதியும் சந்திக்கும் இடத்திலுள்ள வாசல் பாவனைக்காக பார்வையிடும் நேரம் மட்டும் திறந்துவிடப்படும்.

2. ஒரு நோயாளிக்கு 2 பார்வையாளர் அனுமதிப்பத்திரம் மட்டும் வழங்கப்படும். 5 நாட்களுக்கு மேலாக விடுதியில் தங்க நேரிடும் போது பொறுப்புத் தாதிய உத்தியோகத்தரிடம் காட்டி அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். இக் கால எல்லைக்குள் வீடு செல்ல நேரும்போது அனுமதிப்பத்திரத்தை கையளித்தே செல்லவேண்டும்.

3.வைத்தியசாலை வைத்தியர்களால் நோயாளி ஒருவருக்கு உதவியாளர் தேவையென சிபாரிசு செய்யப்படும் போது உதவியாளர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இவர்கள் வீடு செல்லும்போது அனுமதிப்பத்திரத்தை விடுதியில் பொறுப்புத் தாதிய உத்தியோகத்தரிடம் ஒப்படைத்துச் செல்ல வேண்டும்.

4. பொதுமக்கள் அனைவரும் வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தரின் வழிப்படுத்தல்களுக்கு அமைய நடந்து ஒத்துழைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

எனவே எதிர்காலத்தில் வைத்தியசாலையில் முறையான வசதிகள் கிடைக்கும்வரை பொதுமக்கள் அனைவரும் இந் நடைமுறையைக் கைக்கொண்டு நிர்வாகத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி/1720)


# வீட்டுத்திட்டப்பணிகள் பூர்த்தியாக்கப்படவில்லை

## மக்கள் விசனம்

(கொழும்புத்துறை)

உடுப்பிட்டி இலகடி இராசமாணிக்கம் சன சமூக நிலைய பகுதியில் தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைத்துக்கொடுக்கப் பெற்ற 11 வீடுகள் மிகுதி வேலைகள் பூர்த்தியாக்கப்பட முடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதிகளில் வீதிகள் மோசமான நிலையில் காணப்படுவதாகவும் மின்சார வசதிகள், குடிநீர் வசதிகள் உட்பட அடிப்படை வசதி குறைபாடுகளுடன் மக்கள் சிரமப்படுவதாக வும் கடந்த 1999ஆம் ஆண்டு முதல் எந்த வித அபிவிருத்தித் திட்டமும் முன்னெடுக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-3-51)


அன்றாட தேவைக்கான அனைத்துப் பொருட்களையும்
இலகுவாகக் கொள்வனவு செய்திட நாடுங்கள்
யாழ். நகரின் மத்தியில்

"ராம் சுப்ப சிற்றி"



இரண்டாம் ஆண்டில் காலடி வைப்பதை முன்னிட்டு ஒருவார காலத்திற்கு 4000/= க்குமேற்பட்ட தொகைக்குப் பொருட்களை கொள்வனவு செய்யும் அதிர்ஷ்டசாலிகளுக்கு கவர்ச்சிகரமான பரிசுகள் காத்திருக்கின்றன.

இவ்வார காலப் பகுதியில் கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருட்களுக்கும் 5 வீத விலைக்கழிவு

1. CD - Player
2.Phone
3. Iron Box
4. Watch
5. 10 ஆறுதல் பரிசுகள்

இவ் அரிய வாய்ப்பு 01.12.2010 தொடக்கம் 08.12.2010 வரையாகும்.

முந்துங்கள் உங்கள் பரிசுக்கு.

* சிறந்த பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள்
* ஐஸ்கிறீம் வகைகள்
* குளிர்பானங்கள்
* பழரசங்கள்
* பழ வகைகள்
* இறைச்சி வகைகள்
* சொசேச் வகைகள் [Keells]
* பால்மா வகைகள்
* பிளாஸ்ரிக் கதிரை வகைகள் [Nilkamal
* போன் வகைகள் [E-Tel]

தரமான சொக்லெட் உட்பட வகை வகையான தரமான அனைத்துப் பொருட்களையும் பெற்றிட....

உங்கள் தினசரி தேவைக்கு விஜயம் செய்து பாருங்கள்

T.p : 0212221252
0212221262

Raam Super City,
306, Hospital Road, Jaffna.





பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்கள்
(B.A. (Hons) Dip.in ED, PGDEM, MED, SLPS - I )

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்கள் கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று எமது பாடசாலையை எவ்வாறு வளம்படுத்தினாரோ அவ்வாறு கோப்பாய் கோட்டத்தையும் மிளிரச்செய்து மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று பல்லாண்டு வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க
வித்தியாலய கல்விச் சமூகம்,
ஆவரங்கால்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கு தனியார் துறையினரை ஊக்குவிக்க வேண்டும்

## வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கு தனியார் துறையினரை ஊக்குவித்து அதன் மூலம் கிடைக்கும் வரியை கொண்டு வருமானத்தை அதிகரிக்க முடியும் என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஜோன்சன் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.மாநகரசபையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதன்னை தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

குறுகிய காலத்தில் வருமானத்தை பெறுவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதேவேளை யாழ்.மாநகரசபைக்கு சொந்தமான சொத்துக்கள் இனம் காணப்பட வேண்டும். சொத்துக்களை இனங்கண்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகரிக்க வேண்டும்.

போக்குவரத்திற்கு தடை ஏற்படாத வகையில் நடைபாதை வியாபாரம் செய்வதற்கு இடங்கள் இருந்தால் நடைபாதை வியாபாரத்திற்கு அனுமதியளித்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்.மாநகர சபையிடம் குறைந்த வாடகைக்கு வர்த்தக நிலையங்களை பெற்று அதனை கூடிய வாடகைக்கு விடுகின்றனர். அத்தகைய நடவடிக்கையில் நேரடியாக மாநகர சபையே செயற்படலாம்.குறிப்பாக 20 ஆயிரம் ரூபா வரி அறவிடக் கூடிய கடைகளை 2 ஆயிரம் ரூபாவிற்கு வாடகைக்கு பலர் எடுத்துள்ளனர். இது காலப்போக்கில் வேறு தரப்பினர்களுக்கு விடப்படுகிறது.

இவை தவிர தேவையற்ற செலவீனங்களை குறைத்து வருமானத்தை அதிகரித்து அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தலாம். இதில் அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம்.

யுத்த காலத்தில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் இருந்த வீடுகள், வர்த்தக நிலையங்கள் யுத்தம் நிறைவடைந்தும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. அத்தகைய நிலையங்களில் இருந்து யாழ். மாநகர சபைக்கு வரும் வருமானங்கள் நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக வடமாகாண ஆளுநரிடம் தெரிவிக்கப்படும்.

சட்டத்தின் படி அனைவரும் நடக்க வேண்டும். அனைவருக்கும் வரையறைகள் உள்ளன. கொழும்பு மாநகர சபை போல் வருமானம் பெறக் கூடியதாக யாழ்.மாநகர சபையும் தமது பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

இவற்றோடு அடுத்த வருடம் முதலாம் திகதியிலிருந்து உள்ளூராட்சி திணைக்களத்தால் மேற்பார்வை குழு தமது பணியை மேற் கொள் எவுள்ளது. இதன்படி அலுவலக பணி நேரத் தில் உரிய காரணமில்லாமல் வெளியிடங்க ளுக்கு செல்வது, இரண்டு நாட்களுக்கு மேலாக ஆவணங்கள் மேசையில் இருந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுதோடு பணி நீக்கமும் செய்யப்படும்.இந்த மேற்பார்வை குழுவில் அலுவலக பணியாளரும் ஒருவர் உள்வாங்கப்படுவர் என அவர் மேலும் தெரி வித்தார். (ஸ்ரீ-6)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி

(கொழும்புத்துறை)

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் யாழ். பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் 73 குடும்பங்களுக்கும் கோழி வளர்ப்பதற்கு 125 பயனாளிகளுக்கும் கைத்தொழில் உபகரணங்கள் 15 பயனாளிகளுக்கும் சந்தைப்படுத்தல் 47 பயனாளிகளுக்குமாக உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

## கலைஞர் விபரத்திரட்டை பெற்றுக் கொள்ளாதோருக்கு

(கொழும்புத்துறை)

கலைஞானம் நல்லூர் பிரதேச கலைஞர் விபரத்திரட்டை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி ரஜனி கந்தசாமியிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சகல துறை கலைஞர்கள் 221 பேரின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-51)

# சமுர்த்தி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடு 2ஆயிரம் மில்லியனாக அதிகரிப்பு

## அமைச்சர் பசில் பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி நிதி ஒதுக்கீடு 2ஆயிரம் மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கடந்த காலங்களில் 30மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டு வந்தபோதும் இம்முறை அத்தொகை 2000 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் எண்ணிக்கை தற்போது 15 இலட்சமாக உள்ளதுடன் 40ஆயிரம் மில்லியன் ரூபா நிதி சமுர்த்தி உதவியாக வழங்கப்பட்டுள்ளது என வும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய ஐ.தே.க. எம். பி ரவி கருணாநாயக்க எழுப்பிய சமுர்த்தி உதவி பெறுவோர் தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரி வித்தார்.



அவர்மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் தொடர்ந்தும் சமுர்த்தி உதவி பெறுபவர்களாக இல்லாமல் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி சுயமாக வாழச் செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அதற்கான செயற்திட்டங்களையே பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற் கொண்டு வருகிறது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டை ரூ.285மில்.செலவில் நிர்மாணம்

## அமைச்சர் டக்ளஸ் சபையில் தெரிவிப்பு

(கொழும்பு)

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை 285 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வடக்கின் பாரிய கைத்தொழில் பேட்டையான இதனை எதிர்வரும் 2012ஆம் ஆண்டில் திறப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு-செலவுத்திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் வகையில் சிறு கைத்தொழில் துறையை மேம்படுத்தும் பல்வேறு திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கான வழிகாட்டல்களையும் பயிற்சிகளையும் நாம் வழங்கி வருகின்றோம்.

கிராமிய கைத்தொழில் துறையில் தற்போது ஈடுபட்டுள்ளவர்களுக்கு மேலதிகமான பயிற்சிகள் வழங்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

பொதுச் சேவைகள் நிலையம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் உபகரணங்கள் உள்ளிட்ட வசதிகளும் ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன எனக் கூறினார். (ஸ்ரீ-2)

# வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நூர்டீன் மசூர் மாரடைப்பால் மரணம்

(கொழும்பு)



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய நூர்டீன் மசூர் நேற்று கொழும்பில் மாரடைப்பினால் காலமானார். சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் இரவு கொழும்பு நவலோக தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் இவர் காலமாகியுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையாராகிய இவருக்கு இறக்கும் போது வயது 48 ஆகும். மன்னார் எருக்கலம்பிட்டியில் தனது ஆரம்பப் படிப்பை முடித்துக் கொண்டு யாழ் பல்கலைக்கழகப் பட்டதாரியாக வெளியேறினார்.

வர்த்தக நிர்வாகத் துறையில் பட்டதாரி யான இவர் இறக்குமதி வர்த்தகத்திலும் தங்க நகை வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்தார். கடந்த 2001 ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட நூர்டீன் மசூர் வன்னிப் பிதேசத்தின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான பிரதி அமைச்சராகவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இளம் வயதிலேயே மறைந்துள்ள இவரது இழப்பு இவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்திற்கும் பாரிய இழப்பாகவே கருதப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# நோர்வேயின் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்கு இலங்கை வர விசா மறுப்பு

(கொழும்பு)

நோர்வேயின் சமாதான முயற்சிகள் ஏன் தோல்வி அடைந்தன என்று ஆய்வு நடத்த அந்நாட்டிலிருந்து வருகை தர இருந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இருவருக்கும் விசா அனுமதி வழங்க இலங்கை மறுத்துள்ளது.

நோர்வே 1997ஆம் ஆண்டு முதல் கடந்த 2009ஆம் ஆண்டுவரை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான அனுசரணையாளராக பணியாற்றியது. ஆனால் இவ் அனுசரணைப் பணி தோல்வி அடைந்துவிட்டது.

இத்தோல்வியின் காரணம் என்ன? என் பதைக் கண்டறிய இருவரும் இலங்கை வர இருந்தனர். இவர்களில் ஒருவர் நோர்வேயை தளமாகக்கொண்டு இயங்கும் நிறுவனத் தலைவர் குனர்சோபோ .

இவர் அண்மையில் நோர்வேக்கு விஜயம் செய்திருந்த எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடியிருந்தார். இலங்கைக்கு வந்து அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரை சந்தித்து நோர்வேயின் தோல்விக்கான காரணங்கள் குறித்து அபிப்பிராயம் பெற அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் இருவரும் உத்தேசித்திருந்தனர்.

விசாக்கள் மறுக்கப்பட்ட நிலையில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருக்கின்றனர். நோர்வேயின் முயற்சி இலங்கைக்கு பிடிக்கவில்லை என்று தெரிவித்திருக்கின்றார்கள். (ஸ்ரீ-2)

# பாலம் சேதமடைந்துள்ளதால் விபத்துச் சம்பவங்கள் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் உள்ள வீதிப் பாலம் முற்றாக சேதமடைந்துள்ளதால் வாகன போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படுகிறது.

நேற்று இருபாடசாலை மாணவர்கள் சைக்கிளுடன் உடைந்த பாலத்திற்குள் வீழ்ந்து சிறு காயங்களுக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பலர் வீதிப்பாலம் உடைந்திருப்பதை கவனிக்காமல் விபத்துக்குள்ளாகி வருவதால் மேற்படி பாலத்தை புனரமைத்துத் தருமாறு உரிய தரப்பினரிடம் கொழும்புத்துறை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாநகரசபையின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாநகரசபையில் நடைபெற்றது.இதில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஜோன்சன், யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## வினைத்திறன் காண் பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் பட்டதாரிச் சேவையைச் சார்ந்த அலுவலர்களுக்கு நடாத்தப்படவிருக்கும் 2ஆம் வினைத்திறன் காண் பரீட்சையை முன்னிட்ட பயிற்சிக் கருத்தரங்கொன்று கடந்த நவம்பர் மாதம் 20,21 ஆம் திகதிகளில் வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தினரால் யாழ்.மாநகரசபை மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

ஆயினும் அதில் பலர் கலந்துகொள்ள முடியாத நிலையில் இருந்தனர்.எனவே இதனைக் கருத்தில் கொண்டு இதில் கலந்து கொள்ளாத ஏனைய அலுவலர்களுக்கு இந் நிறுவனத்தினரால், நாளை, நாளை மறுதினம் அதே பயிற்சிக் கருத்தரங்கு வேம்படி மகளிர் கல்லூரியில் மீண்டும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே இதில் கலந்துகொண்டு அனைவரும் பயன்பெறுமாறு வடமாகாண அரசசேவை பட்டதாரி அலுவலர் சங்கச் செயலாளர் கே. எஸ்.மயூரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## நாடக விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடாத்தும் நாடகவிழா எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கலாசாலையின் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முதுபெரும் நாடகக் கலைஞர் எஸ்.ரீ.அரசு (அரசையா) கலந்துகொள்வார்.

இதில் பண்டாரவன்னியன் ,கவரிமான் , மதுராதகனம் , ஒருவினாவுக்கு ஒருவிடை மட்டுமா? ஆகிய நாடகங்கள் மேடையேறவுள்ளன.

இந்நிகழ்வில் வரவேற்புரையை முத்தமிழ் மன்றத்தலைவர் அ.ல.பிலாலும் வாழ்த்துரையை கலாசாலை விரிவுரையாளர் வீ. கருணலிங்கமும் வழங்குவர். (ஸ்ரீ)




## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாடநெறி ஆரம்பம்

(அல்வாய்)

வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாடநெறி எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு யா/புலோலிமெ.மி.த.க.பாடசாலையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் ஜி.ரி.இசற் ஆலோசகரும் ஆறுதல் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளருமான சுந்தரம் டிவகலாலா கலந்துகொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார் என வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. தில்லைநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## மாகாண மட்ட நிலையறி பரீட்சை விபரங்களை ஒப்படைக்க கோரிக்கை

(அல்வாய்)

தரம் 3தொடக்கம் 9 வரையான மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மாகாண மட்ட நிலையறி பரீட்சையில் 70 வீதத்திற்குக் குறைவான. புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் விபரங்களை வகுப்பு ரீதியாக தயாரித்து உடனடியாக கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும் அண்ணளவாக 20 புள்ளிக்குக் குறைவான புள்ளி பெற்றவர்கள் ஏ.எல்.பி. இற்குள் சேர்க்கப்படல் வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தரம் 9 மாகாண மட்ட பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் சகல பாடங்களினதும் பரீட்சை புள்ளி, கணிப்பீட்டு புள்ளிகளை கணனியில் பதிவுசெய்து வன் பிரதியொன்றை கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## உரைநடை நூல் வெளியீட்டு விழா

(மருதங்கேணி)

இ.ஞானசுந்தரம் எழுதிய பிள்ளையார் புராண எளிய உரை நடைநூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு பொலிகண்டி இருப்பைமூலை சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப் புலவர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வைத்தியகலாநிதி பொன்.சின்னத்தம்பி கலந்துகொள்ளவுள்ளார்.

இதன் வெளியீட்டுரையை ஆலய பரிபாலன சபை உபதலைவர் என்.ஆறுமுகம் வழங்கவுள்ளார். இதன் முதற்பிரதியை ஆலய பரிபாலன சபைத்தலைவர் என். குழந்தைவடிவேல் பெற்றுக்கொள்வார். (ஸ்ரீ-3-35)

## இலவச சீருடை விநியோகம்

(அல்வாய்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இலவச சீருடை நேற்றுமுன்தினம் மாலை கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ் இலவச சீருடையை அவ்வவ் வலய கணக்காளர்களுடன் தொடர்புகொண்டு பெற்று விடுமுறைக்கு முன்னதாக மாணவர்களுக்கு வழங்குமாறு சகல அதிபர்களுக்கும் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## சகல பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(அல்வாய்)

கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாக அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

இதற்கமைய சகல பாடசாலைகளிலும் புல், பூண்டுகள், நீர் நிலைகள் ஆகிய நுளம்பு பெருகும் இடங்கள் சுத்தமாக்கப்பட்டு அகற்றப்படுதல் வேண்டும் என யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் இன்று தேசிய மட்ட டெங்கு ஒழிப்பு நாளாகும். இதனை செயற்படுத்தி அறிக்கையைப் பேணும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-3-19)

## இலவச பாடநூல்களின் ஒருதொகுதி அனுப்பிவைப்பு

(அல்வாய்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்களின் ஒரு தொகுதி நேற்று முன்தினம் மாலை மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டு திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-19)

## ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 1, 2இல் ஆங்கிலப் பேச்சு மற்றும் தரம் 3 தொடக்கம் 5 வரை செயற்பாட்டு மட்ட ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளையும் நாளை மறுதினமும் காலை 8 மணிதொடக்கம் மாலை 4மணிவரை யாழ்/ வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## சாதாரண தர மாணவர்களுக்கான 3 ஆவது மதிப்பீட்டு பரீட்சை

(அல்வாய்)

வடக்கு மாகாண பாடசாலைகளில் கல்வி கற்கும் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான 3 ஆவது மதிப்பீட்டுப் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் கணிதம் , விஞ்ஞானம் , வரலாறு ஆகிய பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இம் மதிப்பீட்டை மாணவர்களுக்கு நடாத்தி அதன் பகுப்பாய்வை அவ்வவ் வலயங்களில் உள்ள அவ்வவ் பாடத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை வினாப்பத்திரங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் தத்தம் கோட்டக்கல்வி பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள் ளுமாறு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## மாகாண மட்ட போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

மாகாண மட்டத்தில் நடைபெற்ற கோலம், வாய்ப்பாடு, திருக்குறள் மனனம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய வடமராட்சி வலய பாடசாலை மாணவர்களின் விபரம் வருமாறு,

**கோலம்**

தரம் -2

சு.வனஜா (யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பா.) - முதலாமிடம்

தரம் -4

ஜெ.கார்த்தி(யா/கற்கோவளம் மெ.மி.த. க.பா.) -மூன்றாமிடம்

**வாய்ப்பாடு**

தரம் -4

ம.கோபிகா (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.)-முதலாமிடம்

தரம்-5

ந.விதுஷன் (யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.)-இரண்டாமிடம்

**திருக்குறள்**

தரம் -5

பா.பானுஜா (யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.)- முதலாமிடம்

தரம் -4

செ.தர்சிகா (யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.)-இரண்டாமிடம்

தரம் -3

ம.அபிநயா (யா/நெல்லியடி மெ.மி.த. க.பா.) -மூன்றாமிடம்

(ஸ்ரீ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுவலுவுள்ளோரின் தேவைகளை இனம்கண்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்போம்

## இன்று சர்வதேச வலுவிழந்தோர் தினம்




**செல்வி த.சௌந்தரராணி**
**ஆசிரியர்,**
**இல்லச் சகோதரி -AROD**

இன்றைய உலகில் பல்வேறு தினங்கள் கொண்டாடப்படுகின்றன. அவற்றின் சில மகிழ்விற்கானது.சில உலக நன்மையை வேண்டியது.மற்றும் சில மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கானது. அந்த வகையில் இன்றைய தினம் மாற்றுவலுவுள்ளவர்களின் தினம் . மக்கள் மத்தியில் மாற்றுவலுவுள்ளவர்களின் பிரச்சினைகள், அவர்களின்தேவைகள் , அவர்களிற்கான உரிமைகள் என்பவற்றை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாள்.

இன்றைய தினம் பற்றி இலங்கை மக்கள் குறிப்பாக வடகிழக்கில் வாழும் மக்கள் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் இறுதி யுத்தத்தில் மாற்றுவலுவுள்ளவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் ஏராளம். அவர்களுடன் சேர்ந்து வாழும் மக்கள் அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வது மிகவும் அவசியம். உண்மையில் இன்றையதினம் மிக ஆழமானது.ஆழ்ந்த மன உணர்வுகளை சுமந்து கொண்டிருப்பது.

மாற்றுவலுவுள்ளவர்கள் என்னும் பெயர் வந்ததன் காரணம் இவர்கள் திறன் குறைந்தவர்களான போதும் ஏனைய திறன் கொண்டு குறைவற்ற திறனையும் நிறைவு செய்பவர்கள் என்பதனாலேயே ஆகும். எனவே ஏனையவர்கள் இவர்களை பரிதாப கண்கொண்டு பார்ப்பதை விடுத்து அவர்களின் உரிமைகளுடன் அவர்கள் வாழ வழிகாட்டவேண்டும். நிதம் ஏனையவர்கள் கொடுப்பதை வாங்கி உண்டு வாழும் நிலையை விடுத்து அவர்களே தேடுவதற் கான வழியைக் காட்ட முன்வரவேண்டும்.

மாற்றுவலுவுள்ள பிள்ளைகளை பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் குறைகளை நினைத்து அதனை ஒரு அவமானமாகக் கருதி தாமும் ஒதுங்கி தமது பிள்ளைகளையும் ஒடுக்கி வாழ்கின்றார்கள். தேவையற்ற வேதனைகளை மனதில் சுமந்து கொண்டு வாழ்கின்றார்கள். ஆனால் இந்த வேதனையை விடுத்து தமதுபிள்ளைகளையும் சமூகத்தில் ஒரு அங்கம் என்பதை உணர்ந்து தமது பிள்ளைகளை சமூகத்தின் சவால்களை எதிர்கொண்டு வாழ்பவர்களாக மாற்றி உருவாக்குவார்களேயானால் அவர்களே சிறந்த பெற்றோர்கள்.

இன்றைய சமூகத்தின் இவ்வாறான பெற்றோர்களைக் காண முடிந்தபோதும் இன்னும் பல பழைய பாணியிலேயே எண்ணுகின்றனர்.இது மாறவேண்டும். தமது பிள்ளையின் கல்வியிலே மிக முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.கல்வியே சமூகத்தின் பார்வையை மாற்றி அமைக்கக் கூடியது, சமூக அந்தஸ்து வழங்கக் கூடியது.

நாம் சமூகம் சார்ந்த கண்கொண்டு நோக்கும்போது எமக்கு பல குறைகளும் நிறைகளும் தெரியும். மாற்றுவலு வுள்ளவர்களின் தேவைகள், நிறைவுகள் பற்றி நிறைய விடயங்களை அலசமுடியும். ஆனால் இன்றைய சமூகத்தில் வைத்தியர்கள், உயர் நிர்வாக அதிகாரிகள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் என பல பதவிகளில் அமர்ந்திருக்கும் மாற்றுத்திறனுடையவர்கள் நம்மைப் போன்றவர்கள் பற்றி கொண்டிருக்கும் கண்ணோட்டம் என்ன? பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து கிடைத்த சந்தர்ப்பங்களை பயன்படுத்தி உயர் நிலையை அடைந்து விட்டவர்கள் தமக்கு பின்னே நிற்கும் இளம் மாற்றுவலுவுள்ளவர்கள் பிள்ளைகள் போன்றவர்களுக்கு வழங்கும் சந்தர்ப்பங்கள் தான் என்ன?

நம்மில் பலர் ஏனையவர்கள் செய்வார்கள் எனக் காத்திருக்கும் இயல்பு கொண்டவர்கள்.நிறுவனங்கள், அரசாங்கம் செய்யும் எண்ணத்துடன் வாழ்கின்றவர்கள். தமது தேவைகளை தாமே முன்னின்று தேடிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர் களாலேயே இந்தப் போட்டிமிகு உலகில் வாழமுடியும். விழிப்புலனற்றோர் சங்கம், செவிப்புலனற்றோர் சங்கம் போன்றன அந்தவகையில் பாராட்டப்பட வேண்டியன. தாமே தமக்காக செயற்படுகின்றன. ஆனால் இன்னும் இன்னும் தேவைகள் பல மாற்றுவலுவுள்ளவர்கள் சார்பில் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. கல்வி, தொழில் வாய்ப்பு, ஆளுமை விருத்தி அது தொடர்பான செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.




" அடம்பன் கொடியும்திரண்டால்மிடுக்கு..." எனும் வாக்குப் போன்று இவ்வாறான சிறுவர்களும் ஒன்றுசேர்ந்து வாழும் இவர்களிடம் காணப்படும் தாழ்வுணர்ச்சி நீங்கி தம் செயற்பாடுகளை சிறப் புறச் செய்கின்றனர். தன்னம்பிக்கையுடன் செயற்படு கின்றனர். எனவே ஏனைய சிறுவர் களிற்கு இல்லங் கள் அமைப்பது போன்று மாற்றுவலுவுள்ள சிறுவர்களிற்கும் ஒரு இல்லம் அமைத்து அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உறுதுணையாகச் செயற்படமுடியும்.

மேற்குலக நாடுகளில் பல முன்னேற்றகரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இந்தியாவிலும் கூட பல திட்டங்கள் அரசாலும்,தனியாராலும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.அதில் குறிப்பாக கூறக்கூடியது விவேகத்திறன் குறைந்த பிள்ளைகளின் பெற்றோர்கள் ஒன்றிணைந்து தமக்குப் பின் தம்பிள்ளை வாழும் காலத்தில் அவர்களுக்கான ஒரு பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.இது அப் பெற்றோர்கள் தமது இறுதிக் காலத்தின் நிம்மதியான மரணத்தை அடைவதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று சிறப்பாக இயங்கி வருகின்ற ஓர் அமைப்பாகக் காணப்படுகின்றது.

இன்றைய இயந்திர உலகில் முதியோர் இல்லங்கள் அவசியமான ஒன்றாக மாறி வருகின்றது.பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோருக்கே இப்படியான நிலை என்றால் குடும்ப வாழ்வு சாத்தியமற்ற மாற்றுவலுவுள்ளவர்களின் முதுமைப் பருவம் எவ்வாறு அமையும். சகோதர உறவினரின் பாதுகாப்பு என்பது எல்லோருக்கும் சாத்தியமானதா? இவை பற்றியும் நாம் அதிகம் சிந்திக்கவேண்டும்.

இவைபோன்ற செயற்பாடுகள் பல மேற்கொள்ளவேண்டி இருப்பதால் ஏனையோர்களை நம்பி இருப்பதை விட மாற்றுத் திறனாளிகளே மாற்றுத் திறனாளிகளிற்காக செயற்படவேண்டும். நாம் பெற்ற சந்தர்ப்பங்களை வாழ்ந்து வருபவர்களிற்கு பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். ஆண்டுதோறும் நடைபெறும் தினங்களில் மட்டும் கூடிப்பிரிவதை விடுத்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளை செய்ய முன்வரவேண்டும்.

# இலங்கையின் சுற்றுலாத்துறை 43 வீத வளர்ச்சியடைந்துள்ளது

## சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இவ்வருடம் சுற்றுலாத் துறை 43 சதவீத வளர்ச்சியைக் காட்டுவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவிக்கின்றது.

இலங்கைக்கு கடந்த 10 மாதங்களில் சுமார் 5 இலட்சம் பேர் வருகை தந்துள்ளதாகவும் எதிர்வரும் மாதங்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நேற்று ஐரோப்பாவில் இருந்து இரண்டு இலட்சம் பேரும் தென்னாபிரிக்காவில் இருந்து 1இலட்சத்து 30ஆயிரம்பேரும் அவுஸ்திரேலியாவில்இருந்தும் 25ஆயிரம் பேரும் தென்கிழக்கு ஆபிரிக்காவில் இருந்து 52ஆயிரம் பேரும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து 30ஆயிரம் பேரும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து 26ஆயிரம் பேரும் வடஆபிரிக்காவிலிருந்து 32 ஆயிரம் பேரும் வருகை தந்துள்ளதாகவும் தரவுகள் கூறுகின்றன. (ஸ்ரீ-2)

# இன ரீதியாக கொழும்பு மக்களை வெளியேற்றுவதற்கு அரசு முயற்சி

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

இனரீதியாக கொழும்பு மக்களை வெளியேற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நகர அபிவிருத்தி என்ற பெயரில் அரசாங்கம் இன ரீதியாக மக்களை வெளி யேற்ற முயற்சிசெய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பி னர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித் துள்ளார். வரவு-செலவுத்திட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சு குழு நிலை விவாதத் தில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நகர அபிவிருத்திக்காக காணிகள் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டவர்களில் அநேகமானவர்கள் தமிழ் மற்றும் முஸ்லிம்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் திட்டத்தில் ஏதேனும் உள்நோக்கம் காணப்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாக அவர் குறிப்பிட்டு ள்ளார்.இதேவேளைநகர அபிவிருத்தி நடவடிக்கை பிரதேசமக்களை அசௌகரியத் தில் ஆழ்த்தும் வகையில் மேற்கொள்ளப்படக் கூடாது என ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.மக்களை நெருக்கடிக்கு இட்டுச் செல்லாத வகையில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# பெண்கள் மீதான வன்முறை சம்பவங்கள் அதிகரிப்பு

அண்மைக்காலங்களில் கிளிநொச்சிப் பகுதியில் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப் படுகிறது.

கிளிநொச்சியில் குறிப்பிட்ட சில இடங்களில் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்களிலும் அங்க சேஷ்டைகளிலும் சில சமூக விரோதிகள் ஈடுபட்டு வருவதாகவும் இவற்றுடன் தொடர்புடையவர்கள் தமிழ்மொழி பேசும் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010


# பயிற்சி வினாத்தாள் - கணிதம்-I

## பகுதி - A | 2 மணித்தியாலங்கள்


- எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.
- விடைகளைப் பெறும் விதத்தைக் காட்டுவதற்கு ஒவ்வொரு வினாவுக்குக் கீழேயும் விடப்பட்டுள்ள இடத்தைப் பயன்படுத்துக.
- பகுதி Aயின் 1-10 வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 1 புள்ளியும், 11-30 வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 2 புள்ளிகளும், பகுதி Bயின் வினாக்கள் ஒவ்வொன்றின் விடைக்கும் 10 புள்ளியும் வழங்கப்படும்.

1) ரூபா 1000 கொடுத்து குடையொன்றை வாங்கிய பின் மீதிப் பணமாக ரூபா 675 கிடைத்தால் குடையின் விலை யாது?

2) பென்சிலின் நீளத்தை cm இல் தருக.




3) படத்தில் $x$ இன் பெறுமதி யாது?





4) விரித்தெழுதுக. $3(1 - 2x)$

5) வெற்றுக் கூட்டை நிரப்புக.
$3 : 4 = \square : 20$

6) பின்வரும் தரவுகளின் இடையம் யாது?
3, 8, 11, 12, 15


7) 1.75kg ஐ g இல் தருக.

8) $n(\varepsilon)$ இன் பெறுமதி யாது?




9) தரப்பட்ட தாயத்தின் வரிசையை எழுதுக.
$\begin{bmatrix} 2 & 3 & 5 \\ 1 & 0 & 4 \end{bmatrix}$


10) படத்தில் காட்டிய தரவுகளின்படி y இன் பெறுமதி யாது?





11) பென்சில் பெட்டி ஒன்றின் உற்பத்திவிலை ரூ. 175 ஆகும். விற்பனையின் போது 12% இலாபம் பெறப்பட்டால் விற்ற விலை யாது?

12) $4x + 2y = 9$
$x + 3y = 6$ எனும் ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்க்காது $x + y$ இன் பெறுமதி அறிக.

13) செங்கோண $\Delta ABC$யில் BC, AB யில் வரையப்பட்டுள்ள சதுரங்களின் பரப்புகள் முறையே $169cm^2$, $25cm^2$ ஆகும். AC யின் நீளம் யாது?





14) Oவை மையமாகவுடைய வட்டத்தில் AC நாண் ஆகும். Aயில் வரையப்பட்ட தொடலி AB ஆயின் $B\hat{A}C$ யின் பெறுமதி யாது?





15) குமார் ஒரு குறித்த நிறுவனத்தின் பங்குகளை ரூ. 15 படி ரூ. 12000 முதலிட்டு கொள்வனவு செய்தான். பங்குகளின் மொத்த பெயர்மாத்திரைப் பெறுமானம் ரூ. 9600 ஆயின் பங்கு ஒன்றின் பெயர்மாத்திரைப் பெறுமானம் யாது?

16) Aயிலிருந்து Bயின் திசைகோள் $225^0$ ஆயின் Bயிலிருந்து Aயின் திசைகோள் யாது?





17) படத்திற்காட்டியபடி வெற்றுக் கூடுகளை நிரப்புக.


$\frac{AC}{AB} = \frac{AB}{\square} = \frac{\square}{BD}$




18) $x - 2 \geq 1$ என்பதை தரப்பட்ட எண் கோட்டில் வகைக்குறிக்க.




19) $\sin 60^0 = 0.8660$ ஆயின் $x$ இன் பெறுமதி யாது?





20) $A = \{x : x \in Z, -1 < x < 4\}$ ஆயின். A என்னும் தொடையை மூலங்களில் எழுதுக.


21) சுருக்கி எழுதுக. $\frac{(a^2)^3 \times a^0}{a}$

22) $x = \frac{p}{1 - p}$ என்னும் சூத்திரத்தில் p ஐ எழுவாயாக மாற்றுக.

23) படத்தில் காட்டிய ஐங்கோணியில் உள்ள தரவுகளின் படி $x$ இன் பெறுமதி யாது?




24) சதுரவடிவ சலவைக்கல் ஒன்றின் ஒருபக்க நீளம் 28cm ஆகும். நிழற்றிய பகுதியின் சுற்றளவு யாது?




25) மடக்கை வாய்ப்பாடுகளை உபயோகிக்காது சுருக்குக.
$2\lg 5 + \lg 12 - \lg 3$

26) (0, 2) மற்றும் (1, 4) என்னும் புள்ளிகளினூடாகச் செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது?

27) இரு நகரங்களுக்கிடையேயான தூரம் 24km ஆகும். 1 : 50000 என்னும் அளவிடையில் வரையப்பட்ட படத்தில் இதன் அளவிடை நீளம் யாது?

12 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18ஆவது அரசியலமைப்பிற்கான திருத்தமும் இலங்கையின் எதிர்காலமும்

**சிந்தனைக்கூடம்-யாழ்ப்பாணம் எனும் ஆய்வு,அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி நல்லூர் தியாகி அறக் கொடை நிறுவன மண்டபத்தில் இடம்பெற்ற முழுநாள் செயலமர்வில் சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சிகேவா (LLB சட்டத்தரணி,பணிப்பாளர், சன நாயக உரிமைகளை காப்பதற்கான இயக்கம்) நிகழ்த்திய உரை இங்கு பிரசு ரமாகிறது.**

எனவே, அரச இயந்திரத்தின் சகல துறைகளையும் கட்டுப்படுத் தக் கூடிய அதிகாரங்களை தம் வசப் படுத்தியுள்ளமையால் தற்போது ஜனாதி பதிக்கு எதுவித அச்சமும் கிடை யாது. தேவையான நிதியை ஒதுக்கு வதும் ஜனாதிபதியே. தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் அரச ஊழியர் கள் ஆகியோரிடையே தமக்கும் சாத கமான உணர்வுகளை ஏற்படுத்துவது மூலம் நிச்சயமாக வெற்றியடைய முடி யும். இவ்வாறாக தன்னை ஜனாதி பதிப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கும் தேர்தலை நடத்துவதும் ஜனாதிபதியே. இந்த அபூர்வமான ஜனநாயத்திற்கு தேவையான முறையில் வாக்கு களைப் பெறும் வகையில் மக்கள் அபிப்பி ராயத்தை உருவாக்குவது ஊடக ஏக போகம் மூலம் இடம்பெறுகின்றது. அவசியமாயின் எதிர்க்கட்சிப் பாரா ளுமன்ற உறுப்பினர்களை பணத்திற் கும், பதவிகளுக்கும்-குற்றங்களை மறைப்பதற்கும் விலைக்குவாங்குவது மூலம் தன்னைச் சார்ந்தோரின் எண் ணிக்கையை அதிகரித்துக்கொள் ளவும் முடியும். சட்டத்துறையிலிருந்து ஏற்படக்கூடிய தடைகளை நீக்குவ தற்கு சட்டத்தை தாம் விரும்பியவாறு வரைவிலக்கணம் செய்யும் ஒரு சிலர் நீதிமன்றங்களிலும் சட்டத்துறையி லும் உள்ளனர்.

நாட்டின் அபிவிருத்திக்கும் பாது காப்பிற்கும் இவ்வளவு அதிகாரம் தேவையென ஊடகங்கள் அடிக்கடி துதிபாடுகின்றன. ஜனநாயக நடை முறைகள் மூலம் அபிவிருத்தி செய்ய முடியாதா? இவ்வாறாக அபிவிருத்தி செய்தாலும் அதன் விளைவுகள் ஜனநாயக முறையில் பயன்படுத்தப்படு வதில்லை என்பது தெளிவு. நாட் டின் அரசியல் மிக மோசமாக சீரழிந்துள்ளது. இத்தகைய ஒரு சூழ் நிலை யில் சாதாரண வாக்காளர்களின் உருவாக்கம் மறைமுகமாக ஒடுக்கப்பட வில்லையா?

**ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு வருகை தருதல்**

ஜனாதிபதி அவரது பதவியின் நிமித்தம் மூன்று மாதங்களுக்கொரு தடவை பாராளுமன்றத்திற்கு வருகை தருதல் வேண்டும். உறுப்புரை 32 (3) இது மாபெரும் நடவடிக்கை என சிலர் துதிபாடுகின்றனர். ஆனால் இங்கும் எவ ருக்கும் இல்லாத அதிகாரங்கள் உண்டு.

வாக்களிப்பதற்கான உரித்துடைமை யைத் தவிர, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உள்ள எல்லாச் சிறப்புரிமை களும் விடுபட்டு உரிமைகளுக்கும். அதி காரங்களுக்கும் ஜனாதிபதி உரித்து டையவராதல் வேண்டும். பாராளுமன்றத் தின் அல்லது அதன் உறுப்பினர்களின் ஏதேனும் சிறப்புரிமைகளினது மீறு கைக்காக ஆளாதலுமாகாது. உறுப் புரை 32 (3)

ஜனாதிபதி, அவரது பதவியின் நிமித்தம் பாராளுமன்றத்தில் உரையாற்று வதற்கும் அதற்குச் சமாசாரம் அனுப்பு வதற்கும் உரித்துடையவராக இருத்தல் வேண்டும். உறுப்புரை 32 (4)

வாக்களிக்கும் உரிமை ஜனாதி பதிக்கு இல்லையென குறிப்பிடப்பட் டாலும் பாராளுமன்றத்திற்கு ஜனாதி பதி அனுப்பும் ஒரு சட்ட மூலத்தை பாராளுமன்றம் நிராகரிக்க முடியுமா? அவ்வாறு செய்ய முடியாத வகையில் பாராளுமன்றம் பலவீனப்படுத்தப்பட் டுள்ளது.

அரசர் அரச சபைக்கு வருகை தரும் போது அமைச்சர்களும் அரசருக்குச் சார்பான கட்சி உறுப்பினர்களும் ஒழுக வேண்டிய முறையையே மேற் படி சிறப்புரிமைகளை சிந்தித்துப் பார்க் கையில் புலப்படுகிறது. இதற்கமைய பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறும் ஒருவர் முன்னிலையில் பாராளு மன்றம் ஒழுக வேண்டிய முறை சட் டத்தின் சொற்களுக்கிடையே மறை முகமாக எழுதப்பட்டுள்ளது. குழுக் கள் கலந்துரையாடல்கள், கூட்டத் தொடர்கள், வினா எழுப்புதல் கலந்துரை யாடல் என்பன மூலமே பாராளுமன் றம் மக்களுக்கு வகைபொறுப்புக் கூறும் அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றது. எனினும், அவை அனைத்தும் இப்போது இல்லாதொழிக்கப்பட்டுள்ள முறை தெளி வானது. பாராளுமன்றக் குழுக்கள் அர சாங்கத்தின் குழுக்களாக மாறிவிட் டன. வினாக்களைக் கேட்டால் அது நகைச்சுவைக்கு ஆளாக்கப்படுகிறது. விவாதங்களை நடத்துதல் என்பது சேறு பூசுவதாகவே கருதப்படுகின்றது. அதி காரம் ஒரிடத்தில் குவிக்கப்பட்டமை யின் விளைவுகளே இவை.

அரசியலமைப்பு நிபுணர் ஏ.வி. டை சியை மேற்கோள் காட்டி பிங்ஹேம் பிரபு பின்வருமாறு கூறுகின்றார்:

"இவ்வாறாக எவருமே சட்டத்திற்கு உயர்வாக இருக்கக்கூடாது அதே சமயம் சகல நீதிமன்றங்களும் நடை



முறைப்படுத்தும் சகல சட்டங்களுக் கும் அனைவரும் கீழ்ப்படிதல் வேண்டும்".

இக் கூற்று இன்றைய இலங்கைக் குப் பொருந்தாது!

நீண்டகாலத்திற்கு முன்னர் 1733இல் கலாநிதி தோமஸ்ஃபுளர் பின்வரு மாறு கூறுகின்றார்:

"நீங்கள் எவ்வளவு உயர்ந்த நிலை யில் இருந்தாலும் சட்டம் உங்களை

**சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா**

விட உயர்ந்த நிலையிலேயே உள் ளது".

மேற்படி கூற்று இன்றைய இலங் கைக்குப் பொருந்தக் கூடியவாறு திருத்தி அமைக்க வேண்டும்.

"சட்டம் எவ்வளவு சக்திவாய்ந்த தாக இருப்பினும் இலங்கை ஜனாதி பதி அதற்கு மேலேயே உள்ளார்".

(முற்றும்)





புங்குடுதீவு கமலாம் பிகை வித்தியா லயத்தில் அண்மையில் தேசிய மர நடுகை விழா இடம் பெற்றது. இவ் விழாவிற்கு பிர தம விருந்தினர், அதி பர், ஆசிரியர்கள் ஆகி யோர் மாணவர் களால் அழைத்துவரப்படு வதையும் புங்குடுதீவு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பொறுப் பா ளர் நவம் தோழர் மரக் கன்றினை நடுவதையும் படங்களில் காணலாம்.

# புலிகளுக்கு போலிக்கடவுச்சீட்டு விநியோகித்த குற்றச்சாட்டில் எழுவர் ஸ்பெயினில் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு போலிக் கடவுச் சீட்டு விநியோகித்த குற்றத்தின் பேரில் ஸ்பெயி னில் 7 நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளது டன் தாய்லாந்திலும் இன்னும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

ஸ்பெயினின் பார்சிலோனாவை தளமா கக் கொண்டு இயங்கிய குறித்த கும்பல் விடுதலைப்புலிகள் மட்டுமன்றி அல் கொய்தா உள்ளிட்ட உலகின் மிகப் பிரபல மான அனைத்துத் தீவிரவாத இயக்கங்க ளுக்கும் போலிக் கடவுச்சீட்டு தயாரித்துக் கொடுக்கும் பணியை மேற்கொண்டுள்ளது என தெரியவந்துள்ளது.

அதன் தலைவர்களாகச் செயற்பட்ட ஒரு பாகிஸ்தானியர் மற்றும் தாய்லாந்துக்காரர் ஆகியோருடன் இன்னும் ஒரு பாகிஸ்தானி யரும் அண்மையில் தாய்லாந்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். அதன் பின்பே குறித்த கும்பல் ஸ்பெயினைத் தளமாகக் கொண்டு இயங்கி வருவது தெரியவந்துள்ளது.

விசாரணைகளில் கிடைத்த தகவல்க ளைக் கொண்டு ஸ்பெயினில் இயங்கிய கும்பலில் உறுப்பினர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். அவர்களில் நைஜீரியர்,பாகிஸ் தானியர்,தாய்லாந்துக்காரர் ஆகியோர் உள் ளடங்குவதாக ஸ்பெயின் பொலிஸ் வட்டாரங் கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# போதைக்கு அடிமையான கைதிகளுக்கு புனர்வாழ்வு

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனைக்கு அடி மையாகி சிறைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைக்கு அபாயகர ஔடத கட்டுப்பாட் டுச்சபை ஒத்துழைப்பு வழங்க தீர்மானித் துள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு உள் ளாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்களுக் கான இந்தத் திட்டம் அடுத்த வாரம் வீர விலையில் உள்ள சிறை முகாமில் ஆரம் பிக்கப்படவுள்ளதாக அந்தச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை போதைப்பொருள் பாவ னைக்கு உட்பட்டு வீரவிலை,தல்தென மற் றும் பல்லேகல ஆகிய புனர்வாழ்வு நிலையங் களில் புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணை யாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வி.ஆர். சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் போதைப்பொருள் பாவ னைக்கு அடிமையான கைதிகளை இந்த முகாம்களுக்கு அனுப்புவதற்கு தீர்மானித் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விதிப்பு மாற்றமும் பொருளாதார தாக்கங்களும்

## ஓர் ஆய்வு (04)

5.3 பாவித்த வாகனங்களுக்கான பெறுமானத் தேய்வு

உபயோகித்த வாகனங்களின் இறக்குமதிகள் மீது பின்பற்ற வேண்டிய பெறுமானத் தேய்வு வீதங்கள் உலக வர்த்தக ஸ்தாபனத்தின் உடன்படிக்கையின்படி மாற்றப்படும். இதற்கிணங்க 6 மாதத்திற்கு குறைந்த பாவனையைக் கொண்ட வாகனங்களுக்கு கப்பற் தளம் மட்டும் பெறுமதியில் (FOB) பெறுமானத் தேய்வு 90% இலிருந்து $5^1/_2$ ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட பாவனை வாகனங்களுக்கு 30% வரையில் பாவனை காலத்தைப் பொறுத்து குறைந்து செல்லும்.

5.4 சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தீர்வைக் குறைப்புக்கள்

பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் தென்கிழக்காசிய சுதந்திர வர்த்தகப் பகுதி (SAFTA) ஆகியவற்றின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வைக் குறைப்புக்கள் 23.11.2010 இலிருந்து நிறைவேற்றப்படும்.

6. செஸ் வரி

(i) தற்போது நடைமுறையிலுள்ள மூலப் பொருட்கள் மற்றும் இயந்திரங்களின் மீதான செஸ் வரி பெரும்பாலானவற்றிற்கு நீக்கப்படும். உள்நாட்டில் பெறுமதி சேர்க்கப்படும் கைத்தொழில்களுக்கு செஸ் வரி மீளமைக்கப்படும். புதிய வீதங்கள் 19.11.2010 ஆம் திகதி 1680/25 ஆம் இலக்க வர்த்தமானிக் குறிப்பில் ஒன்று சேர்க்கப்படும்.

(ii) பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக மூலப்பொருள் இறப்பர் ஏற்றுமதிகள் மீது செஸ் வரியொன்று விதிக்கப்படும்.

7. மாகாண சபைகளின் வரி நிர்வாகம்

தற்போது மாகாண சபைகளால் நிர்வகிக்கப்படும் மொத்த சில்லறை வர்த்தகம் மீதான மொத்த விற்பனை வரி 01.01.2011 இலிருந்து முடிவுக்கு வரும். மேலும் மத்திய அரசாங்கத்தால் சேகரிக்கப்படும் பின்வரும் வரிகளில் குறித்த விகிதாசாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் / மாற்றப்படும்.

(i) முத்திரைத் தீர்வை சேகரிப்புக்களில் 100%

(ii) மோட்டார் வாகனப் பதிவுகளின் மொத்த சேகரிப்புக்களில் 70%

(iii) தேச கட்டுமான அறவீட்டில் 33 1/3%

8. ஏனைய வரி விதிப்பு மாற்றங்கள்

(i) தொலைத் தொடர்புள்ள அறவீடு

இத்துறைக்கு தற்போதுள்ள வரி விதிப்புக்கள் சிக்கலானதாகும். எனவே இதனைக் கருத்திற் கொண்டு அத்தகைய வரிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து 20 சதவீத தொலைத் தொடர்புகள் அளவீடு (Tele co mmunication Levy) ஒன்று விதிக்கப்படும்.

(ii) தொலைபேசி அழைப்புக்களுக்கான கட்டணம்

வெளிச் செல்லும் சர்வதேச அழைப்புக்களுக்கு ஒவ்வொரு நிமிடத்திற்கும் 2 ரூபா அறவிடப்படும். அதேவேளை 2011 ஜீலை மாதத்திலிருந்து உள்நாட்டு அழைப்புக்களுக்கான ஆகக் குறைந்த கட்டணம் 2 ரூபாவிலிருந்து 1.50 ரூபாவாகக் குறைக்கப்படும்.

(iii) 5 நட்சத்திர ஹோட்டல்களின் கட்டணங்கள் மீதான அறவீடு

2011 ஜனவரியிலிருந்து இரவொன்றுக்கு 125 ஐக்கிய அமெரிக்க டொலர்களை விடக் குறைவான அறை கட்டண விகிதத்தினை அறவிடும் அனைத்து 5 நட்சத்திர ஹோட்டல்கள் மீதும் கட்டிலொன்றுக்கு 20 ஐக்கிய அமெரிக்க டொலர்களை அறவீடொன்றுக்கு 20 ஐக்கிய அமெரிக்க டொலர்களை அறவீடொன்றாக விதிக்கப்படும்.

(iv) பங்குகொடுக்கல் -வாங்கல் அறவீடு.

தற்போது 0.2% இல் அறவிடப்படும் பங்குக் கொடுக்கல்- வாங்கல் அறவீடு 01.01.2011 இலிருந்து 0.3% ஆக அதிகரிக்கப்படும்.

(v) கேபிள் தொலைக்காட்சி வரி

தற்போது நடைமுறையிலுள்ள தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி வர்த்தக நடவடிக்கைகள் மீது அறவிடப்படும் விதிப்பனவு கேபிள் தொலைக் காட்சியையும் உள்ளடக்கும் வகையில் நிதிச் சட்டம் திருத்தப்படும்.

(vi) மோட்டார் வாகனங்களின் பதிவு மற்றும் கைமாற்றல் கட்டணம்

- மோட்டார் கார், மோட்டார்கோச் சேவை ஆகியவற்றிற்கு 5000 ரூபாவாகவும் லொறிக்கு 1800 ரூபாவும் ஏனையவற்றிற்கு 1000 ரூபா அல்லது அதற்கு குறைந்த தொகையாகவும் புதிய பதிவுக் கட்டணமாக நிர்ணயிக்கப்படும்.
- அதேவேளை உரிமை மாற்றக் கட்டணங்களும் விவசாய மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கு 500 ரூபாவும், மோட்டார் சைக்கிள்களுக்கு 250 ரூபாவும், ஏனைய வாகனங்களுக்கு 1500 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆடம்பர, உப ஆடம்பர வாகனங்களுக்கான வரிகள் அவற்றின் இயந்திரக் கொள்வனவுக்கேற்ற வகையில் 20,000/=, 50,000/=,



100,000/= என்றவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தகைய 1 ஆவது ஆண்டுக்குரிய வரி தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்லும்.

9. வரிக் கட்டமைப்பிலிருந்து முடிவுக்குக் கொண்டு வரப்படும் அல்லது நீக்கப்படும் வரிகள்.

(i) வரவு வரி (Debit Tax)

வங்கி வைப்புக்களின் மீளப் பெறுகைகளில் விதிக்கப்பட்டிருந்த வரவு வரி 01.04.2010 இலிருந்து முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

பாலசுந்தரம் சிவாஜி
B.A.Hons (Econ),
M.A.(Econ),MBA (Finance),
பிரதி ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

(ii) சமூகப் பொறுப்பு அறவீடு.

வருமான வரி

(தொடரும்)

# சிரேஷ்ட அமைச்சர்களுக்கான தனியான அலுவலகங்கள் தொடர்பில் சிலர் அதிருப்தி

(கொழும்பு)

புதிதாக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட அமைச்சர்களில் திஸ்ஸ விதாரண தவிர்ந்த ஏனையோருக்கு காலிவீதி கொள்ளுப்பிட்டியில் முன்னர் பொதுசேவை ஆணைக்குழுவின் அலுவலகமாக இயங்கிய மூன்று மாடிக் கட்டடத்தின் அடுத்த வாரம் அலுவலகங்கள் வழங்கப்படுமென அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் எம்.ஜெயரட்ணவுக்கு இக்கட்டடத்தில் அலுவலகம் அமைக்கப்படமாட்டாது. ஏற்கனவே பிரதமருக்கு தனியான அமைச்சு அலுவலகம் உள்ளமையே இதற்குக் காரணமாகும்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரணவுக்கு ஐந்தாண்டு தேசிய விஞ்ஞானதிட்டத்தை அமுல்படுத்தும் வகையில் ஊழியர்களும் அலுவலகமும் வழங்கப்படவுள்ளது.

ஏனைய சிரேஷ்ட அமைச்சர்கள் ஒவ்வொருவரும் 10 அலுவலகர்களும் அலுவலகங்களும் வழங்கப்படவுள்ளன. இதேவேளை பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் இந்த ஏற்பாட்டையிட்டு அதிருப்தி வெளியிட்டதுடன் இந்த அலுவலகத்திற்கு தாம் போகப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

நான் அங்கே என்ன செய்யப் போகிறேன் என்று எனக்கு விளங்கவில்லை. சிரேஷ்ட அமைச்சர்கள் ஏனைய அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கி இணைப்பாளராக தொழிற்படுவர் என என்னிடம் கூறப்பட்டது. துறைசார்ந்த அமைச்சர்கள் தமது ஆலோசனையைக் கோர மாட்டார்கள்.

அவர்களுக்கென டசின் கணக்கான ஆலோசகர்கள் உள்ளனர். இவர்கள் தமது துறையில் விற்பன்னர்கள். நாம் அவர்களின் வேலைகளில் தலையிட்டால் அவர்களுக்கும் எமக்கும் இடையில் தேவையற்ற பிரிவுகளும் மனவருத்தங்களும் ஏற்படலாம் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

# கிளிநொச்சி காட்டுப் பகுதிகளில் சட்டவிரோத காடழிப்பு நடவடிக்கை

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, இராமநாதபுரம் காட்டுப் பகுதியில் பெறுமதிமிக்க மரங்கள் தறிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இராமநாதபுரம், புதுக்காடு மற்றும் மாயவனூர் காட்டுப் பகுதிகளில் பெறுமதி மிக்க முதுரை , பாலை போன்ற மரங்கள் தறிக்கப்பட்டு கனரக வாகனங்கள் மூலம் வேறிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் சில உள்ளூர் நபர்கள் மரங்களினைத் தறித்து அவற்றை பகிரங்கமாக விற்பனை செய்வதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை தமது சொந்தக் காணிகளில் உள்ள சிறு மரங்களைத் தறித்து அவற்றை வீடமைப்பதற்காக வேறிடத்திற்கு கொண்டு செல்ல படையினர் தடுத்து வருவதையும் அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர். (ஶ்ரீ-3-30)

# கிளிநொச்சி -வட்டக்கச்சி பிரதானவீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது

## திருத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி –வட்டக்கச்சி பிரதானவீதி மிக மோசமாக சேதமடைந்த நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

வட்டக்கச்சி, இராமநாதபுரம், தர்மபுரம், விசுவமடு போன்ற இடங்களிற்கானபேருந்து சேவை இவ்வீதியூடாகவே மேற்கொள்ளப்படுவதனால் பொதுமக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஶ்ரீ-3-30)

# தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை

## இந்திய மத்திய அமைச்சரவை அனுமதி

(திருவொற்றியூர்)

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே பயணிகள் கப்பலை இயக்கும் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறையின் திட்டத்துக்கு இந்திய மத்திய அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து சென்னை துறைமுகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தூத்துக்குடி -கொழும்பு இடையே பயணிகள் கப்பல்களை இயக்குவதென கப்பல் போக்குவரத்துத் துறை சார்பில் முடிவு செய்யப்பட்டது.

முதலில் தூத்துக்குடி –கொழும்பு இடையே கப்பல் போக்குவரத்தும் பின்னர் இராமேஸ்வரம்- தலைமன்னாரிடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்படும். கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யும்படி தூத்துக்குடி துறைமுக நிர்வாகத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.


தூத்துக்குடி -கொழும்பு இடையே 152 கிலோமீற்றர் கடல் மைல் தூரத்தை கடக்க சுமார் 8மணிமுதல் 10 மணிநேரம் வரை செலவாகும்.தற்போதுள்ள விமானக் கட்டணத்தை ஒப்பிடும்போது கப்பல் பயணத்திற்கு குறைந்த கட்டணமாகவே அறவிடப்படும்.

இதுகுறித்து இந்தியா, இலங்கை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகிய பின் அமைச்சரவை ஒப்புதலை அடுத்து கப்பற்போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கான ஆயத்தப் பணிகள் மூன்று மாதங்களில் நிறைவடையும் என கப்பல் துறை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2-4)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

9ஆம் பக்கத்தொடர்ச்சி...


28) 10cm, 6cm ஆரையுடைய ஒரேமைய இரு வட்டங்களைப் படம் காட்டுகின்றது. சிறிய வட்டத்திற்குத் தொடலியாக உள்ள பெரிய வட்டத்தின் நாண் ABயின் நீளத்தைக் காண்க.




29) படத்திற் காட்டியபடி சார்பின் சமன்பாடு யாது?




30) வெற்றுக் கூடுகளை நிரப்புக.




## பகுதி - B

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1) விளையாட்டுப் போட்டி ஒன்றிற்காக தோடம்பழச் சாறும் அன்னாசிப்பழச் சாறும் 3:2 என்ற விகிதத்திலும். தோடம்பழச்சாறும் நீரும், 1:5 என்ற விகிதத்திலும் கலந்து பழப்பானம் தயாரிக்கப்படுகிறது.

(i) தோடம்பழச் சாறு, அன்னாசிப்பழச் சாறு, நீர் என்பவற்றைக்கிடையேயான விகிதம் யாது?

(ii) 90$l$ பழப்பானம் தயாரிக்கத் தேவையான தோடம்பழச் சாறு எத்தனை லீற்றர்?


(iii) 90$l$ பழப்பானத்தில் $^3/_5$ பங்கு இல்லங்களில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. மிகுதியின் $^1/_4$ பங்கு மாணவதலைவர்களுக்கும் பின்னர் மிகுதி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது.

(அ) இல்லங்களில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பானத்தின் அளவு எத்தனை லீற்றர்?

(ஆ) மாணவ தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பானம் முழுவதின் என்ன சதவீதம்?

(இ) ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட பானம் முழுவதின் என்ன சதவீதம்?

2) 28cm அகலமும் 50cm நீளமுமுள்ள செவ்வக வடிவான அட்டையில் இருந்து 7cm ஆரையுடைய வட்டங்கள் வெட்டி யெடுக்கப்பட்டன.





(i) வட்டம் ஒன்றின் பரப்பளவு யாது?

(ii) செவ்வகத்தின் பரப்பளவு வட்டத்தின் பரப்பளவைப் போல் எத்தனை மடங்கு.

(iii) செவ்வக அட்டையிலிருந்து வெட்டியெடுக்கக்கூடிய வட்டங்களின் அதிகூடிய எண்ணிக்கை யாது?
இதனைப் பருமட்டான படம் மூலம் விளக்குக.

(iv) வீணான அட்டையின் பரப்பளவு யாது?

3) நிறுவனம் ஒன்று எழுத்துப் பரீட்சை, செய்முறைப்பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்ற மூன்றிலும் சித்தி பெறுபவர்களுக்கு நியமனம் வழங்கியது. 90 விண்ணப்பத்தாரிகள் சித்தியெய்திய விதத்தை வென்னுருவம் காட்டுகிறது.




(i) பதவிக்கு நியமனம் பெற தெரிவு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ii) மூன்று பரீட்சைகளிலும் சித்தி பெறத்தவறியோர் எத்தனை பேர்?

(iii) எழுத்துப் பரீட்சையிலும், செய்முறைப் பரீட்சையிலும் மட்டும் சித்தியடைந்தோர் எத்தனை பேர்?

(iv) ஒரு பரீட்சையிலும் மட்டும் சித்தியடையத் தவறியதால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் எத்தனை பேர்?

(v) எழுத்துப்பரீட்சையிலும், நேர்முகப்பரீட்சையிலும் சித்தியடைந்து செய்முறைப்பரீட்சையில் தோல்வியடைந்தோரைக் காட்டும் பிரதேசத்தை நிழற்றுக.

(vi) அதிக எண்ணிக்கையானோர் சித்தியடைந்த பரீட்சை எது?

4) இரு புத்தகசாலைகளின் விளம்பரங்கள் வருமாறு.

| கலைமகள் புத்தகசாலை | வாணி புத்தகசாலை |
|---|---|
| எந்த ஒரு புத்தகத்தினதும் விலை ரூபா. 250 | ஒவ்வொரு புத்தகத்திற்கும் 20% கழிவு தரப்படும் |


(i) 20% கழிவு என்பதால் நீர் கருதுவது யாது?

(ii) ரூ. 280 குறித்த விலையுள்ள புத்தகம் ஒன்றை கலைமகள் புத்தகசாலையில் வாங்குவதால் நீர் பெறும் இலாபம் யாது?

(iii) இதே புத்தகத்தை வாணி புத்தக நிலையத்தில் வாங்குவதாயின் நீர் எவ்வளவு பணம் செலுத்தவேண்டும்? இப் புத்தகத்தை வாங்கப் பொருத்தமான புத்தகசாலை எது?

(iv) ரூ. 300க்கு வாணி புத்தக நிலையத்தில் வாங்கக்கூடிய புத்தகம் ஒன்றின் குறித்த விலை யாது?


5) தரம் 11 மாணவர்கள் குழு ஒன்று கணிப்பீட்டுப் புள்ளிகள் பற்றிய விபரத்தை வலையுருவரையம் காட்டுகிறது.




(i) தரப்பட்ட வலையுருவரையத்திற்கேற்ப மாணவர் எண்ணிக்கை நிரையைப் பூர்த்தி செய்க.

| புள்ளிகளின் ஆயிடை | 30 - 40 | 40 - 60 | 60 - 90 | 90 - 100 |
|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 8 | ....... | ........ | 8 |
| திரள் மீடிறன் | 8 | ....... | ......... | ......... |

(ii) திரள் மீடிறன் நிரையைப் பூர்த்தி செய்வதன் மூலம் திரள் மீடிறன் வளையி வரைக.



(iii) அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 25% மாணவர்களைத் தெரிவு செய்யத் தேவையான மிகக் குறைந்த புள்ளி யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யா/வல்லை மகளிர் மகாவித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களை பாடசாலை பாண்ட் வாத்திய அணியினர் அழைத்து வருவதையும் சிறப்பு விருந் தினராகக் கலந்துகொண்ட வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.மயிலேறு பெருமாள் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வல்வை ஒன்றியத் தலைவர் எக்ஸ்.எல்.குலநாயகம் மற்றும் அவரது பாரியார் திருமதி குலநாயகம் ஆகியோர் நிற்பதையும் பாடசாலை அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-அல்வாய் செய்தியாளர்)

# லங்கா சோல்ற் நிறுவனத்தில் பணிபுரிந்த மேலும் 71 பணியாளர்களுக்கு கொடுப்பனவு

லங்கா சோல்ற் நிறுவனத்தில் பணிபுரிந்த பணியாளர்கள் 96 பேரில் 25 பணியாளர்களது பணிக்கொடை, நட்ட ஈடு, நிலுவைச் சம்பளம் கடந்த ஐப்பசி மாதம் 25ஆம் திகதி தொழில் உறவுகள் உற்பத்தித்திறன் அமைச்சர் காமினி லொக்குகேயினால் வழங்கப்பட்டது.

ஏனைய 71 பணியாளர்களது பணிக்கொடை ,நட்ட ஈடு, நிலுவைச் சம்பளம் என்பவற்றை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள் வதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் ஊழியர்கள் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தொழில் அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தருவதோடு தத்தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையின் நிழற்படப்பிரதியொன்றையும் ரூபா 50 பெறுமதியான முத்திரை ஒன்றையும் எடுத்து வருமாறு யாழ். உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

ஊழியர்களின் பெயர்கள் வருமாறு,

வரதலட்சுமி வோல்ரஸ், புண்ணியமூர்த்தி சிறீகாந்தன், சின்னமுத்து சண்முகவதன், கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை, முருகுப்பிள்ளை குல சிங்கம், யோசப் திரவியஹகம், முருகன் கந்தசாமி, சித்தன் கந்தசாமி, கார்த்திகேசு விக்னேஸ்வரன், பரமசாமி பத்மகாந்தன், வீரசிங்கம் ராஜேந்திரம், கனகசபை குணசிங்கம், கதிர்காமம் மதிபால சிங்கம், சண்முகம் துரைராஜா.

மூத்ததம்பி நவரட்ணம், அந்தோணிப்பிள்ளை தேவசகாயம், சின்னர் தனிகாசலம், செல்லத்தம்பி சிவகுமார், கருதன் தவநாதசெல்வம், வேலுப் பிள்ளை தங்கராஜா, சின்னவன் லக்குணம், எல்.எவ். கீல், சுந்தரம் வல்லி புரம், முருகன் வைரமுத்து, பொன்னுச்சாமி தங்க வடிவேல், கணபதிப்பிள்ளை ஞான லிங்கம், சிவக்கொழுந்து சிவராஜா, சீந்தனம் ராமன், கொலின் கனக ராஜா, சுந்தரம் புலெந்திரன், நடராஜா மகேந்திரம், நடராஜா தெய்வேந்திரம், சரவணாநந்தம் கஜேந்திரராஜா, மயில் வாகனம் சந்திரசேகரம், கணபதிப்பிள்ளை மகாதேவா, கந்தையா விநாயகமூர்த்தி, ஆறுபிள்ளை கனகசிங்கம் ,கனகசபை தங்கேஸ்வரன், இராசையா நவரட்ணம், மயிலுகானம் கணபதிப்பிள்ளை, ஆறுமுகம் கந்தசாமி, சின்னையா கந்தசாமி, குழந்தையன் சிவப்பிரகாசம்.

தம்பிராஜா துரைசாமி, சின்னவன் சின்னத்தம்பி, கருதன் செல்வராஜா, தர்மலிங்கம் பத்மநாதன், முத்தையா சிவம், சிவசம்பு சிவகுமார், செல்லத்தம்பி சந்திரகுமார், கிட்டிணன் சந்திரசேகரம், இராசையா நடராஜா, கார்த்தி கேசு தியாகராஜா, பொன்னையா இராசரத்தினம், வேலுப்பிள்ளை குமார சாமி, கோவிந்தபிள்ளை முத்துலிங்கம், அருணாசலம் இராமபிபள்ளை, சின்னையா தியாகராஜா, கந்தையா குணபாலசிங்கம், கந்தையா மனோகரன், வைரமுத்து சின்னையா, வல்லிபுரம் பத்மநாதன், கஸ்பர் சந்திரன் ,சுப்பையா ஸ்ரீகந்தராஜா, பீ.செல்வ நாயகம், செல்லத்துரை வீரபத்திரன், சீனிராஜா சுந்தரராஜா, இராசையா பரராஜசிங்கம், இளைய தம்பி செல்வ ராஜா, கனகசபை மயில் வாகனம், கே.செல்வராஜா.

(ஸ்ரீ-2)

# அடைமழை காரணமாக கிளிநொச்சியில் வெள்ளம்

## 600 குடும்பங்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் இதுவரையில் அங்கு 600குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் அறிவித்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 407குடும்பங்களும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 182 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குடும்பங்களுக்கான அவசர உதவிகளை பிரதேச செய லகங்கள் மேற்கொண்டு வருவதாக வும் மழை தொடரும்பட்சத்தில் இன்னும் அதிக பாதிப்புக்கள் ஏற்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# 7சிறுமிகளிடம் பாலியல் சில்மிசம்

## தொண்டராசிரியருக்கு பிணை வழங்க வேண்டாமென ஹற்றனில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தரம் 5இல் கல்வி கற்கும் மாணவிகள் 7 பேரிடம் பாலியல் சில்மிசம் செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியருக்கு பிணை வழங்க வேண்டாம் எனக் கோரி நேற்று ஹற்றன் நகர சபையின் முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

டிக்கோயாவிற்கும் நோட்டனுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் உள்ள தமிழ் பாடசாலை ஒன்றில் தொண்டர் ஆசிரியராக சேவை புரிந்த 25 வயதுடைய இளம் தொண்டர் ஆசிரியர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கடந்த 22ஆம் திகதி கைது செய்யப்பட்டு ஹற்றன் நீதிமன்றில் நோட்டன் பொலிஸார் ஆஜர் படுத்தினர். அவரை நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில் இந்த சந்தேக நபரை நேற்று முன்தினம் ஹற்றன் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட போது இவருக்கு பிணை வழங்க வேண் டாம் எனக்கோரியும் இவ்வாறான சம்பவங்கள் மலையகத் தமிழ் பாடசாலைகளில் இனி மேலும் இடம் பெறக் கூடாது என்று வலியுறுத்தியும் பெற்றோர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் சந்தேக நபரை நேற்று முன்தினம் ஹற்றன் நீதிமன்றில் அஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

2010.12
03

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

✠1592-எட்வேர்ட் பொனவென்சர் என்ற ஆங்கிலக் கப்பல் இலங்கைத்தீவின் காலியை வந்தடைந்தது.

✠1800-மியூனிக் அருகில் ஹோஹென்லிண்டென் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியாவைத் தோற்கடித்தன.

✠1818-இலினோய் ஐக்கிய அமெரிக்காவின் 21ஆவது மாநிலமானது.

✠1854- அவுஸ்திரேலியாவின் விக்டோரியாவில் பல்லராட் என்ற இடத்தில் தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது படையினர் சுட்டதில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

✠1903-சேர் ஹென்றி பிளேக் ஆளுநராக நியமனம் பெற்று இலங்கை வந்து சேர்ந்தார்.

✠1904-வியாழனின் ஹிமாலியா என்ற சந்திரன் சார்ல்ஸ் டில்லன் பெரின் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

✠1912- பால்கன் போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் பல்கேரியா கிரேக்க நாடு மொண்டெ னேகிரோ மற்றும் சேர்பியா ஆகியன துருக்கியுடன் போர் நிறுத்த உடன்பாட்டை மேற்கொண்டன.

✠1917- 20ஆண்டுகள் கட்டுமானப் பணியின் பின்னர் கியூபெக் பாலம் திறக்கப்பட்டது.

✠1944- கிறீசில் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் அரச படைக்கும் இடையில் உள்நாட்டுப் போர் வெடித்தது.

✠1967-தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் கிறிஸ்டியன் பார்னார்ட் தலைமையில் உலகின் முதலாவது இருதய மாற்றுச் சிகிச்சை 53 வயது லூயிஸ் வாஷ்கான்ஸ்கி என்பவர் மீது வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

✠1971- இந்திய - பாகிஸ்தான் போர் 1971: இந்தியா கிழக்கு பாகிஸ்தானை முற்றுகையிட்டது. முழுமையான போர் ஆரம்பித்தது.

✠1973- வியாழனின் முதலாவது மிகக்கிட்டவான படங்களை பயனியர் 10 விண்கலம் பூமிக்கு அனுப்பியது.

✠1984- இந்திய நகரான போபாலில் யூனியன் கார்பைட் நிறுவனத்தில் இடம்பெற்ற நச்சுவாயுக் கசிவில் 3ஆயிரத்து 800 பொதுமக்கள் உடனடியாகக் கொல்லப்பட்டனர். 1 இலட்சத்து 50 ஆயிரம் தொடக்கம் 6 இலட்சம் பேர் வரையில் காயமடைந்தனர். இவர்களில் 6ஆயிரம் பேர் வரையில் பின்னர் இறந்தனர். உலகில் இடம்பெற்ற மிக மோசமான தொழிற்சாலை விபத்து இதுவாகும்.

✠1989-மால்ட்டாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ.புஷ் சோவியத் ஜனாதிபதி மிக்கைல் கொர்பச்சோவ் ஆகியோர் பனிப்போர் முடிவடையும் கட்டத்தில் உள்ளதாக அறிவித்தனர்.

✠1997-நிலக்கண்ணிவெடிகளைத் தயாரிப்பது மற்றும் பயன்படுத்துவது தடைசெய்யும் ஒப்பந்தத்தில் 121 நாடுகள் ஒட்டாவாவில் கையெழுத்திட்டன. அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகியன இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.

✠1999-செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்ட Mars Polar Lander இன் தொடர்புகளை நசா இழந்தது.

✠2007-இலங்கைத் துடுப்பாட்ட அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தேர்வுத் துடுப்பாட்டத்தில் 709 இலக்குகளை வீழ்த்தி புதிய உலக சாதனை படைத்தார்.

### பிறப்புக்கள்

✠1795-ரோலண்ட் ஹில் நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். (இ.1879)

✠1884- ராஜேந்திர பிரசாத் இந்தியாவின் முதலாவது ஜனாதிபதி (இ.1963)

### இறப்பு

✠1552- புனித பிரான்சிஸ் சவேரியார் மதப் போதகர் (பி.1506)

**இன்று சர்வதேச வலுவிழந்தோர் தினமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிலீக்ஸ்க்கும் அமெரிக்க அரசுக்கும் மறைமுகத் தொடர்பு

## சீனா குற்றச்சாட்டு

(பீஜிங்)

விக்கி லீக்ஸ் ஆவணங்கள் வெளியிடுவதை அமெரிக்காவின் புலனாய்வு ஏஜென்சியான சி.ஐ.ஏ.வால் தடுக்க முடியவில்லை.

இதனால் அமெரிக்காவுக்கும் விக்கி லீக்சுக்கும் இடையில் மறைமுகத் தொடர்பு இருந்திருக்குமோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது என்று சீனாவின் அதிகாரபூர்வ பத்திரிகையான குளோபல் டைம்ஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

சீனாவில் இருந்து வெளியாகும் ஒரே ஆங்கிலப் பத்திரிகையான குளோபல் டைம்ஸ் தனது தலையங்கத்தில் இது குறித்து எழுதியிருப்பதாவது சுவீடன் நாட்டைச் சேர்ந்த விக்கி லீக்ஸ் அமெரிக்க வெளியுறவு தொடர்பான இரகசிய ஆவணங்களை வெளியிட்டதன் மூலம் அமெரிக்காவுக்கு நெருக்கடி கொடுக்க முற்பட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளதை பார்த்தால் அந்த ஆவணங்கள் மீதான நம்பகத்தன்மை அதிகரிக்கத்தான் செய்கிறது. இரகசிய தகவல்களை எவ்வித செலவுமின்றி பெறுவதற்கு ஆயிரக்கணக்கான ஊழியர்களை வைத்திருப்பதாக விக்கி லீக்ஸ் தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் புலனாய்வு ஏஜென்சியான சி.ஐ.ஏ.வால் இந்த வெளியீட்டை தடுக்க முடியவில்லை.

ஜூலியன் அசேஞ்ச் பிரபலமானவராக இருந்தும் இன்னும் உயிருக்கு பயந்து ஓடிக் கொண்டிருக்கிறார். இவற்றையெல்லாம் பார்க்கும் போது சில கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

விக்கி லீக்சுக்கும் அமெரிக்க அரசுக்கும் இடையில் மறைமுகத் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகம் எழாமல் இல்லை இவ்வாறு அதில் எழுதப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## எகிப்து பாராளுமன்ற தேர்தலில் ஆளும் கட்சி பெருவெற்றி

(கெய்ரோ)

எகிப்து பாராளுமன்றத்துக்கான முதல் கட்டத் தேர்தலில் ஆளும் கட்சியான தேசிய ஜன நாயகக் கட்சி பெரும் வெற்றி பெற்றுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான முஸ்லிம் சகோதரத்துவ கட்சி ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. எகிப்தில் கடந்த மாதம் 28 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கான முதற் கட்ட தேர்தல் நடந்தது.

மொத்தம் உள்ள 518 இடங்களில் 221 இடங்களுக்கு மட்டும் நடந்த இத்தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியான முஸ்லிம் சகோதரத்துவ கட்சி மிகக்குறைந்த இடங்களில் மட்டுமே தனது வேட்பாளர்களை நிறுத்தியது. இதன் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாயின.

இதில் ஆளும் தேசிய ஜனநாயகக் கட்சி 209 இடங்களைப் பிடித்து பெரும் வெற்றி பெற்றுள்ளது. எதிர்க்கட்சியினர் ஓரிடத்தில் கூட வெற்றி பெறவில்லை. இரண்டாவது கட்டத் தேர்தல் நாளை மறுதினம் இடம் பெறவுள்ளது. அதில் முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி 27 வேட்பாளர்களை நிறுத்தத் திட்டமிட்டுள்ளது. தற்போது வெளிவந்துள்ள தேர்தல் முடிவுகளை புறக்கணிக்கப் போவதாகவும் அது அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# விலைவாசியை சமாளிக்க சீன அரசு புதிய திட்டம்

(பீஜிங்)

சீனாவில் விலைவாசி உயர்வை சமாளிப்பதற்காக ஏழைகளுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்க சீன அரசு திட்டமிட்டுள்ளது.

சீனாவில் நாளுக்கு நாள் பணவீக்கம் அதிகரித்து விலைவாசி ஏறிவருகிறது. அதைச் சமாளிக்க முடியாமல் அங்குள்ள சாதாரண மக்கள் தடுமாறி வருகின்றனர்.

இதனால் அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள கோபத்தைத் தணிக்கும் வகையில் சீனாவின் மேற்குப் பகுதிகளில் உள்ள வயதானோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஆதரவற்றோருக்கு மாதந்தோறும் 20 யுவான் (சீன நாணயம்) வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

சீனாவின் நாணய மதிப்புக் கணக்குப்படி அமெரிக்க டொலர் மூன்றுக்கு 20 யுவான் சமனாகும். ஒரு மாதத்திற்குக் கிட்டத்தட்ட 150 ரூபாய் வரை ஒருவருக்குத் தரப்படும். இத்திட்டத்தில் முதல் கட்டமாக 46 இலட்சம் பேர் பயனடைகின்றனர். இந்தாண்டு நவம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை இத்திட்டம் செயற்படுத்தப்படும். அதில் 15 யுவான் சீன மத்திய நிதியமைச்சகத்தினால் வழங்கப்படவுள்ளது. மீதிப்பணம் அந்தந்த மாகாண அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும்.(ஸ்ரீ-2)




# சலவை இயந்திரத்தினுள் மாட்டிக் கொண்ட மூன்று வயதுக் குழந்தை பத்திரமாக மீட்பு

(பீஜிங்)



கண்டுபிடித்து விளையாடும் போது சலவை இயந் திரத்தினுள் சிக்கிய 3 வயது ஆண் குழந்தையை தீய ணைப்புப் படையினர் நீண்ட போராட்டத்துக்குப் பின் பத்திரமாக மீட்டனர்.

சீனாவில் ஒரு வீட்டில் பிற்பகலில் தாயும் மகனும் கண்டுபிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப் போது குழந்தை வீட்டில் உள்ள சலவை இயந்திரத்தில் ஒளிந்து கொண்டது. வீடு முழுவதும் தேடிப் பார்த்த தாய், மகனைக் காணாமல் பரிதவித்தார்.

பின்னர் சலவை இயந்திரத்தில் இருந்து முனங்கல் சத்தம் வருவதைக் கேட்டு சென்று பார்த்த போது அதற்குள் மகன் சிக்கிக் கொண்டு வெளியே வரமுடியாமல் இருப்பதைக் கண்டு பதறினார்.

உடனே தீயணைப்புப் படையினருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து அங்கு வந்த தீயணைப்புப் படையினர் சலவை இயந்திரத்தினைத் துண்டு துண்டாக உடைத்து பத்திரமாக குழந்தையை மீட்டனர். (ஸ்ரீ-2)

# ஐரோப்பிய நாடுகளில் கடும் பனிப் பொழிவு

வடக்கு ஐரோப்பாவில் கடுமையான பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பனிப் பொழிவு காரணமாக பிரதேசத்தில் போக்குவரத்து நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.


வட ஐரோப்பாவின் பல விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

போலந்தில் மறை 20 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவியதாகவும் வீடுகளற்ற எட்டுபேர் கடும் குளிரினால் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பிரித்தானியா,பிரான்ஸ், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

பனிப் பொழிவினால் ஸ்பெயின் மற்றும் ஜெர்மன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த விமானப் பயணிகளும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் ஸ்பெயின் பிரதமர் ஜோஸ் லூயிஸ் ரொட்ரி கோஸின் சுவிட்சர்லாந்து விஜயமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவின் வெப்பநிலை மறை 23.6 செல்சியஸ் பாகையாக பதிவு செய்யப்பட்டதாகவும் கடந்த 1931 ஆம் ஆண்டின் பின்னர் பதிவான மிகவும் குளிரான வெப்பநிலைப் பதிவு இதுவெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




சர்வதேச எயிட்ஸ் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் வெள்ளை மாளிகை முன்பு சிவப்பு ரிப்பன் தொங்கவிடப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.

# முதலாவது குளோனிங் ஆடு மூலம் மேலும் 4 டோலி ஆடுகள் உருவாக்கம்

## விஞ்ஞானிகள் சாதனை

(லண்டன்)



முதல் டோலி ஆடு மூலம் மேலும் 4 டோலி ஆடுகளை உருவாக்கி விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு குளோனிங்முறைப்படி டோலி என்ற செம்மறி ஆடு உருவாக்கப்பட்டது. 14 ஆண்டுகளுக்குப்பின் அதிலிருந்து மேலும் 4 டோலி செம்மறியாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றை இங்கிலாந்தில் உள்ள நாட்டிங்காம் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கெய்த் கேம்பெல் உருவாக்கியுள்ளார்.

டோலி செம்மறியாடு பிறந்த 7 ஆண்டுகளுக்குப்பின் நுரையீரல் நோய் மற்றும் மூட்டு வீக்கம் நோயினால் அவதிப்பட்டது. இருந்தும் அதிலிருந்து மேலும் டோலி செம் மறியாடுகளை உருவாக்கும் முயற்சியில் கேம்பெல் குழுவினர் ஈடுபட்டனர்.

இதனால் பலமுறை கருச்சிதைவு ஏற்பட்டது. இருந்தும் புதிய தொழில்நுட்ப முறைகளை கையாண்டு மேலும் 4 டோலி செம் மறியாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை டோலியின் உடல் உயிரணுவில் இருந்தும் அதன் பால் மடித் திசுக்களில் இருந்தும் பிறக்க வைக்கப்பட்டுள்ளன. முதலில் தாய் டோலியை உருவாக்க 277 கரு முட்டைகள் பயன்படுத்தப்பட்டன.

ஆனால், இந்தமுறை ஒரு டோலியை உருவாக்க 5 கரு முட்டைகளே தேவைப்படு கின்றன என விஞ்ஞானி கேம்பெல் தெரி வித்துள்ளார். தற்போது பிறந்துள்ள 4 டோலி ஆட்டுக் குட்டிகளும் உயிருடன் உள்ளன. அவை நாட்டிங்காம் பல்கலைக்கழகத் தில் உலா வருகின்றன. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்கு அடியிலுள்ள வெப்பத்தை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்கு இந்தியா திட்டம்

(தூத்துக்குடி)

இந்தியாவில் பூமிக்கு அடியிலுள்ள வெப்பத்தை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய எரிசக்தி துறை அமைச்சர் பரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு அடுத்த அய்யனார் ஊத்து கிராமத்தில், மத்திய காற்றாலை மின்சக்தி தொழில்நுட்ப மையம் சார்பில், இரண்டு மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் காற்றாலை நிறுவப்பட்டுள்ளது.

இதை இயக்கி வைத்து, மத்திய அமைச்சர் பரூக் அப்துல்லா கூறுகையில், இந்தியாவில், மரபுசாரா எரிசக்தி மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தில், தமிழகத்தின் பங்கு 42 முதல் 45 சதவீதம்வரை உள்ளது.

சூரிய ஒளியை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை, சூரிய ஒளி போன்ற மரபு சாரா எரிசக்தி மூலம், நமது நாட்டில் எதிர்வரும் 2013 இல் ஆயிரத்து 300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரியானா, பஞ்சாப் மாநிலங்களில், உமிமையப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

இதுதவிர சிறியவகை குச்சிகள், சண எரிவாயுவின் மூலம் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இவற்றின் மூலமும், பல ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும்.

பூமி வெப்பத்தை பயன்படுத்தி மின்சாரம் எதிர்காலத்தில் ,நவீன உபகரணங்கள் மூலம், கடலினுள் வீசும் காற்றைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. "சுஸ்லான்" தனியார் நிறுவனம் இத் திட்த்தை வடிவமைத்து வருகிறது. இதுதவிர, பூமிக்கு அடியில் உள்ள வெப்பத்தைப் பயன்படுத்தி, மின்சாரம் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக,ஐஸ்லாந்து நாட்டுடன், நமது நாடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இத்திட்டத்தில், நமக்குத் தேவையான தொழில்நுட்பத்தை அந்நாடு வழங்கும்.

இந்தியாவில், லடாக்,சத்திஸ்கர், குஜராத் போன்ற இமாலயப் பகுதிகளில், இத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு முதற்கட்டப் பணி விரைவாக நடந்து வருகிறது.

நான் குளிர் பிரதேசத்திலிருந்து வந்துள்ளேன். நீங்கள் வெப்பம் மிகுந்த பகுதியில் உள்ளீர்கள். நாம் அனைவரும் ஒரே நாடு என்ற உணர்வுடன் ஒன்றாக இருப்பதுதான் இந்தியாவுக்கு கிடைக்கும் வெற்றி என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)




மதிமுக பொதுச்செயலாளர் வை.கோ. எழுதிய அமெ. அதிபர் ஒபாமா குறித்த எஸ்.வீகேன் என்ற ஆங்கில நூல் வெளியீட்டு விழா புதுடில்லியில் நடைபெற்றது. விழாவில் மத்திய அமைச்சர் பரூக் அப்துல்லா, பஞ்சாப் மாநில துணை முதல்வர் சுக்பீர்சிங், அரியானா மாநில முன்னாள் முதல்வர் ஓம்பிரகாஷ் சௌதாலா, முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்கா, அதிமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் தம்பிதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விண்வெளியில் மனிதன் 'இஸ்ரோ' புதிய திட்டம்

(திருப்பூர்)

நிலவில் உயிர்வாழ்வது தொடர்பான விண்வெளியில் மனிதன் என்ற திட்டத்திற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என இஸ்ரோ விஞ்ஞானி கிருஷ்ணசாமி கூறியுள்ளார்.

மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி திருப்பூரில் இரண்டுநாட்கள் நடந்தது. இதில் கலந்துகொண்ட இஸ்ரோ விஞ்ஞானி கிருஷ்ணசாமி பேசியதாவது, தற்போது 50க்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி மற்ற நாடுகளுக்கு முதன்மையாக இந்தியா விளங்குகிறது. விண்வெளி, செயற்கைக் கோள்களின் பயன்,தேவை அதிகமானோருக்கு தெரிவதில்லை.ஆராய்ச்சியின் மூலம் நாட்டின் பொருளாதாரம்,அறிவியல் வளர்ச்சி மேம்படும்.

கண்டுபிடிப்புகள் பலமேற்கொண்டு வெற்றிகண்டாலும் வரும் காலத்துக்கு இதுபோதாது.

பலநாடுகள் ஆய்வு மேற்கொண் டாலும் நாம் செலுத்திய சந்திரயான் நிலவில் தண்ணீர்இருப்பதை முதன்முறையாக உறுதிப்படுத்தியது.உலக நாடுகளுக்கு நம்மை அடையாளம் காட்டியது.


இதனால் பல நாடுகள் நம்முடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளன. அடுத்ததாக ரஷ்யாவுடன் இணைந்து புதுத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இது நிலவில் விண்கலம் செலுத்தி அதிலிருந்து ரோபோ 100மீற்றர் நடந்து சென்று அங்குள்ள மண்ணை எடுத்து ஆராய்ச்சி செய்வதுபற்றியது. இதில் கடுமையான சவால்கள் உள்ளன. மேலும் நிலவில் உயிர் வாழ்வது குறித்தும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. விண்வெளியில் மனிதன் என்ற திட்டம் உருவாக்கப்பட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.(ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

# பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை

(புவனேஸ்வர்)

பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை ஒரிசா மாநிலம் சந்திப்பூரில் இருந்து வெற்றிகரமாக ஏவி சோதனை செய்யப்பட்டது.




இந்தியாவின் பாதுகாப்புக்காக பிரமோஸ் எனும் அதிநவீன ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தில் பிரமோஸ் ஏவுகணைகள் சேர்க்கப்பட்டன.

பிரமோஸ் ஏவுகணையில் அதிநவீன வசதிகள் உள்ளன. 8.4 மீற்றர் நீளம் கொண்ட இதுதி, திரவ உந்து சக்திகளால் பாயும் ஆற்றல் கொண்டது. அதிக பட்சமாக 290 கி.மீ. தூரத்துக்கு இதைச் செலுத்தமுடியும். பிரமோஸ் ஏவுகணைகள் 300 கிலோ வெடி பொருட்களை சுமந்து சென்று குறிப்பிட்ட இடத்தை தாக்கி அழிக்கும் திறன் கொண்டவையாகும்.

இந்த ஏவுகணையை கப்பல், நீர் மூழ்கிக் கப்பல், பறக்கும் விமானம் மற்றும் தரையில் நகரும் லாஞ்சர்கள் என்ற பல வழிகளிலும் பயன்படுத்த முடியும். இந்திய இராணுவத்தின் முப் படைகளிலும் பிரமோஸ் ஏவுகணை சேர்க்கப்பட்டு வருகிறது. இதையொட்டி அடிக்கடி சோதனை நடத்தப்படு கிறது.

கடைசியாக கடந்த செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. (ஸ்ரீ

# இலங்கையில் விவசாயத்தை மேம்படுத்த இந்தியா உதவி

(புதுடில்லி)

இலங்கையில் விவசாயத்தை மேம்படுத்த தரமான விதைகள் மற்றும் 500 டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து லோக்சபாவில் விவசாயத் துறை இணையமைச்சர் கே.வி.தாமஸ் எழுத்து மூலம் அளித்த பதிலில், இலங்கையின் வடக்கு பகுதி மக்களுக்காக விதைகள் மற்றும் டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்காக 95 ஆயிரம் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. விவசாயம் தொடர்பான நிறுவனம் ஒன்று இலங்கையில் அமைக்க 6 பேர் கொண்ட இந்தியக் குழு ஒன்றும் அனுப்பப்பட்டதாக வும் அமைச்சர் கூறினார்.

மேலும் அவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டு வரும் 2 கரும்பு ஆலைகளை மேம்படுத்த இந்தியா உதவவேண்டும் என்று அந்நாடு இந்தியாவிடம் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ



சபரிமலைக்கு விரதம் இருந்து இருமுடியுடன் வரும் பக்தர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர்.மாலைஅணிந்து சபரிமலைக்கு வந்த ரஷ்ய பக்தர்கள்.

# தமிழகத்தில் கனமழை ஒரேநாளில் 12 பேர் பலி

தமிழகக் கடலோர மாவட்டங்களில் பரவலாக பெய்துவரும் கனமழைக்கு நேற்று ஒரேநாளில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் வடகிழக்குப் பருவமழை தீவிரம் அடைந்துள்ளதாலும், அடுத்தடுத்த காற்றழுத்த தாழ்வு நிலைகளாலும் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்து வருகிறது.

சேலம் பகுதியில் பலமணிநேரம் நீடித்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக சுமார் 8 ஆயிரம் ஹெக்டேயர் விளைநிலங்கள் நீரில் மூழ்கின. நாகையில் கடல் சீற்றத்துடன் காணப்படுவதால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை.

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே ஆற்றில் மூழ்கி இரு பெண்கள் பலியானார்கள்.கூலி வேலைக்குச் சென்ற இவர்கள் ஆற்றைக் கடக்க முயன்றபோது, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இவர்களில் 4 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். அரியலூர் மாவட்டத்தில் மழைக்கு 4பேர் பலியாகியுள்ளனர். குமரி மாவட்டத்தில் சுவர் இடிந்து விழுந்ததில் பெண் ஒருவர் பலியானார்.

திருவள்ளூரில் மின்சாரம் தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்தார். காஞ்சிபுரம் அருகே மின்னல் தாக்கி பெண் ஒருவர் பலியானார். தமிழ்நாட்டில் கன மழைக்கு நேற்று மட்டும் 12 பேர் பலியாகியுள்ளனர். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு அண்மையில் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) சி.புஸ்பலிங்கம், தலைமையுரையாற்றுவதையும், முன்னாள் வடகிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் செயலாளரும் ஜி.ரி.இசற் நிறுவன ஆலோசகரும், ஆறுதல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சுந்தரம் டிவகலாலா, வடமாகாண கல்வித் திணைக்களப் பாடசாலை மேம்பாட்டுத் திட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ், முன்னாள் வடமாகாண கல்வித்திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் கே.சண்முகநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் ஆசிரியர்கள் மத்தியில் உரைநிகழ்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அல்வாய் செய்தியாளர்)

# 49CC க்கு உட்பட்ட மோட்டார் சைக்கிள்களை டிசம்பர் 31 இற்கு முன் பதிவு செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

49CC க்கு உட்பட்ட மோட்டார் சைக்கிள்களை எதிர்வரும் 31 ஆம்திகதிக்கு முன் பதிவு செய்யுமாறு யாழ்.மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வகை மோட்டார் சைக்கிள்களை வைத்திருக்கும் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களை மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்த விற்பனை முகவரிடமிருந்து பெற்று சகல ஆவணங்களுடனும் சமுகமளித்து பதிவு செய்யுமாறு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

இதன்போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகனம் கொள்வனவு செய்யப்படும் போது வழங்கப்படும் வாகனப் பதிவுக்குரிய விண்ணப்பப் படிவம்,

கிராமசேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் அல்லது கொள்வனவு செய்த கம்பனியின் உறுதிப்படுத்தலுடன் தேசிய அடையாள அட்டை, போட்டோ பிரதி என்பவற்றுடன் உரிமையாளரின் 6.25cm x 5.00cm அளவிலான படத்தை கிராம அலுவலர் அல்லது வாகனம் கொள்வனவு செய்த கம்பனி உறுதிப்படுத்தல் வேண்டும், வாகனம் கொள்வனவு செய்யப்படும்போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியும், போட்டோ பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வாகனம் கொள்வனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேற்பட்டிருப்பின் அதற்கான சத்தியக்கூற்றுக் கடிதத்தில் தனது இலக்கம், இயந்திர இலக்கம், நிறம், வாகனம் கொள்வனவு செய்த முகவரின் முகவரி, பற்றுச் சீட்டு, இதுவரை பதிவு செய்யாமைக்கான காரணங்களை சமாதான நீதவான் முன்னிலையில் 25ரூபா பெறுமதியான முத்திரையில் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

வானம் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்டதாயின் அப்பகுதி கிராம சேவகரினால் உரிமையாளரின் பெயர் முகவரியினை உறுதிப்படுத்துவதோடு பிரதேச செயலாளர் மேலொப்பமிட்டு கடிதம் எடுத்து வருதல் வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2-4)

# சாதாரண தர மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த.சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேசிய அடையாள அட்டை அல்லது தபால் அடையாள அட்டையுடன் பாடசாலைக்கு சமுகமளித்து வகுப்பாசிரியரை சந்திக்குமாறு பாடசாலை அதிபர் அ.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# ஞானச்சுடர் சஞ்சிகை வெளிவந்துள்ளது

(மருதங்கேணி)

சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான " ஞானச்சுடர்" கார்த்திகை மாத இதழ் வெளிவந்துள்ளது.

தமிழ் இலக்கியங்கள், நால்வகை ஆச்சிரமங்கள், "ஈழத்துபோதனர்கள்" போன்ற பல சமயக் கட்டுரைகளுடன் இவ் இதழ் வெளிவந்துள்ளது. (ஸ்ரீ-3-35)

# கடும் மழையால் மன்னாரில் 20ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக இதுவரை 5ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஆயிரத்து 900 குடும்பங்களைச் சேர்ந்த 8ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலமே எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த முடியும்

## வடமாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெற்காசிய நாடுகளில் சுகாதாரத்தில் இலங்கை முதலிடம் பிடித்துள்ளது. இத்தகைய நிலையில் எமது நாட்டின் சுகாதாரத்தை பாதிக்கும் வகையில் பல கலாசார சீர்கேடுகள் தலைதூக்கி வருவதாக வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன் தெரிவித்தார்.

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படவேண்டும். பல்லாயிரக்கணக்கான உயிர்களை இந்த எயிட்ஸ் நோய் காவு கொண்டுள்ளது. மருந்தின் மூலம் இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியாது. மக்களின் விழிப்புணர்வின் மூலமே இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

நாட்டில் நடந்த யுத்தம் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சமூகக் குழப்பங்கள் மற்றும் கலாசார சீர்கேடு என்பவற்றால் எயிட்ஸ் நோய் பரவுவது அதிகரித்துவிட்டது.

எனவே மக்களின் விழிப்புணர்வின் மூலமே இந்தநோயைக் கட்டுப்படுத்த முடியும். தமிழர் தம் கலாசாரத்தை பின்பற்றி வாழ்தல் வேண்டும். ஒருத்தனுக்கு ஒருத்தி என்று நேர்மையான வாழ்க்கையை வாழவேண்டும். நாட்டில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 25 வீதமானோர் மாணவர்களாவர்.

வாழும் வயதில் அவர்களுக்கு இத்தகைய கொடிய நோய் ஏற்பட்டுள்ளது எத்தகைய கொடூரம் என்பதை அனைவரும் அறிய வேண்டும். எயிட்ஸ் நோய்க்கு மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் விலை 21 இலட்சம் ரூபா. இந்த மருந்தை எவராலும் வாங்கிப் பாவிக்கமுடியாது. இவ்வாறு விலை கொடுத்து மருந்து வாங்கும் நிலையில் எமது நாட்டில் எவரும் இல்லை.

எயிட்ஸ் நோய் ஆண், பெண் இருபாலாரிடமும் சம அளவில் பரவி வருகிறது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் சம அளவில்தான் உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# இரத்ததான நிகழ்வு

திருமறைக்கலாமன்ற தினத்தை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இவ் உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவ விரும்பும் குருதிக்கொடையாளர்களை இரத்ததானம் வழங்கி உதவுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)



அரசாங்கத் தாதிமார் சங்கத்தினர் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தொடக்கம் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாடு தழுவிய ரீதியில் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அந்த வகையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் நேற்று நண்பகல் ஒரு மணிநேர பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டபோது...

(படங்கள்:- எஸ்.கரன்)

# கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக புனரமைக்கப்படாதுள்ள வீதி

(கரவெட்டி)

அல்வாய் கிழக்கு அத்தாய் வீதி கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக புனரமைக்கப் படவில்லை என்று அப்பகுதி மக்களும் பயணிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ் வீதியால் தினமும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பயணம் செய்கின்றனர். பெருமளவு வாகனங்கள் இப்பகுதியால் பயணிப்பதால் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் தற்போது பெய்து வரும் பருவகால மழையினால் வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது.

இதன் காரணமாக பாதசாரிகள் தமது கடமைகளுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாத அவல நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து அப்பகுதி மக்களின் வீதிப் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுதுள்ளனர். (ஸ்ரீ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்து நிதானமாக இருப்பதே அவதூறுக்குச் சரியான பதில்.

*– ஜார்ஜ் வாஷிங்டன்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ் அரசியல் தலைமைகள் நிதானமாக இருந்தாலே போதும்

உலக நாடுகளை எதிர்த்து எவரும் தலைநிமிர முடியாது என்பதை கடந்த வரலாறுகள் நிரூபிக்கின்றன.

உலக நாடுகளின் மென்மையான அறிவுறுத்தல்கள், கண்டனங்கள் தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியமாகும்.

விடுதலைப் புலிகளும் இது விடயத்தில் அதிக கவனம் செலுத்தவில்லை என்றே கூறவேண்டும். குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று நிகழ்கின்றது. அதனை அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் கண்டிக்கின்றன எனில், அது தொடர்பில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

இது வெறும் கண்டனம், வழமையான சம்பிரதாயம் என்று எவர் நினைத்தாலும் அதன் முடிவு பாரதூரமானதாகவே அமையும்.

இதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் விதிவிலக்கல்ல என்பது நிரூபணமாகியுள்ளது.

ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்றுவதற்காக அழைக்கப்பட்டு அங்குசென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்ற முடியவில்லை எனில் அது சாதாரண விடயமன்று.

இலங்கை யுத்தத்தில் வென்றுவிட்டது எனக் கூறப்படுகின்ற போதிலும் அந்த வெற்றிக்கு சர்வதேசத்தில் இருக்கக்கூடிய மதிப்பு எத்துணை என்பதை இப்போது உணர முடியும்.

எனவே யுத்த வெற்றி என்பது ஒரு நாட்டைச் சேர்ந்த அத்தனை பிரஜைகளாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருக்கும் போதே அதன் மகிமை சர்வதேச அரங்கிலும் பெருமை பெறும்.

மாறாக ஓர் இனத்தின் வெற்றியாக அது அமையுமாயின் சர்வதேசத்தின் முன்னிலையில் அது தோற்றுப்போய் விடுகிறது.

இந்த நிஜங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் லண்டன் பயணம் நிரூபித்துவிட்டது.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்பட்டு அது அமுல்படுத்தப்பட்டிருக்குமாயின் ஜனாதிபதியின் லண்டன் பயணம் நூறுவீத வெற்றியைக் கொடுத்திருக்கும். என்ன செய்வது யுத்தம் முடிந்தவுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தை அரசு மறந்துவிட்டது.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்பது கூட நினைவில்லாமல் போகும் அளவிற்கு நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. இவை ஓர் அரசிற்கு சாதாரண விடயமாக இருக்கலாம். ஆனால் சர்வதேசத்திற்கு அவ்வாறல்ல.

எதுவாயினும் சர்வதேச சட்டங்கள் தமது கடமையைச் செய்யட்டும். ஆனால் ஒரு விடயத்தில் மட்டும் தமிழ் மக்கள் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியுள்ளது. அது என்னவெனில், தமிழ் அரசியல் தலைமைகளின் அசைவிலாகும்.

உலக நாடுகள், ஐ.நா.சபை, சர்வதேச மன்னிப்புச் சபை என அனைத்தும் இலங்கை தொடர்பில் ஏதோ ஒரு இலக்கை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றன.

இதனைப் புரிந்துகொள்ளாமல் எங்கள் தமிழ் அரசியல் தலைமைகள் ஏடாகூடமாக நடந்துவிடக் கூடும். பொதுவில் தமிழ் அரசியல் தலைமைகள் தடம்புரண்டு ஓடி எல்லாவற்றையும் போட்டுடைப்பதே வழக்கம். அத்தகையதொரு அவலமான நிலைக்கு ஆளாகிவிடாத வகையில் தமிழ் அரசியல் தலைமைகள் நிதானமாக நடந்துகொள்ளவேண்டும்.

அதற்காக அவர்கள் தற்காலிக அமைதிகாப்பது ஆரோக்கியமானதாக இருக்கும்.

இதைச் செய்யத் தவறின் நிலைமை படு மோசமாகவும் ஆபத்தாகவும் அமையும் என்பது உணர்தற்குரியது.

## கவிஞர் துரையரின் நூல் அறிமுக விழா

(வவுனியா)

சேமமடு பத்மம் வெளியீடாக கலாபூசனம் அ.துரைசிங்கம் எழுதிய ஐந்து சிறுவர் நூல்களின் அறிமுக விழா நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நூலின் அறிமுகவுரையினை வைத்தியர் மகாலிங்கம் நிகழ்த்தவுள்ளார். (ச–7)

## அதிபர்களுக்கான கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதென கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். அத்துடன் அன்றையதினம் காலை 9.00 மணிக்கு பாட நூல்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். (ச–7,9)

## புகைப்பட ஸ்ரூடியோ சங்கம் ஆட்சேபம்

(கொழும்பு)

ஆட்பதிவுத்தித் திணைக்களம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் ஆகியன புகைப்படங்களை தமது வளாகங்களிலேயே எடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கை தமது வாழ்வாதாரத்தை அழிப்பதாகவுள்ளதாக புகைப்பட ஸ்ரூடியோ உரிமையாளர்கள் முறையிட்டுள்ளனர்.

அகில இலங்கை தொழில்சார் படப்பிடிப்புஸ்ரூடியோ உரிமையாளர் சங்கம் இது தொடர்பான விசனத்தைத் தெரிவித்துள்ளது. சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான புகைப்படங்கள் வேரஹாராவிலுள்ள அலுவலகத்தில் எடுக்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தம் தென்னாபிரிக்க நிறுவனம் ஒன்றிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் இதன் மூலம் பல மில்லியன் ரூபாயை லாபமாகப் பெறுகின்றது என சங்கத்தின் தலைவர் பிரேமதிலக கூறினார். (ச–5)

## போதைப்பொருள் குற்றச்சாட்டில் 2 மாதங்களில் 16 ஆயிரம் பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஒக்டோபர் 13 ஆம் திகதி போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் போதைப்பொருள் வைத்திருந்து விநியோகம் செய்ததாகக் கூறப்படும் 16041 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய நேற்றுத் தெரிவித்தார்.

7 1/2 கிலோக்கிராம் ஹெரோய்ன் 51 ஆயிரத்து 576 கிலோக்கிராம் கஞ்சா 2 ஆயிரத்து 34 கிலோக்கிராம் பாபுள் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்ட 4 ஆயிரத்து 414 பேரும் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் 10107 பேரும் பாபுல் வைத்திருந்த ஆயிரத்து 535 சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது மேல் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களிலேயே கூடுதலாக ஹெராயின் மற்றும் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளன.

பயங்கரவாதம் முடிபுக்கு வந்துள்ள நிலையில் போதைப்பொருள் பாவனையே நாடு எதிர்நோக்கும் பிரச்சினையாகும் என பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய குறிப்பிட்டுள்ளார். (ச–5)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### மார்கழி அதிகாலையில் எழக் காரணம்

மார்கழியில் அதிகாலையில் எழுவதற்கு அறிவியல் தொடர்புள்ள காரணம் இருக்கிறது. இம்மாதத்தில் கடும் குளிர் இருக்கும். இதனால் மனிதனின் இரத்த ஓட்டத்தில் மாறுபாடு ஏற்பட்டு சோம்பல் அதிகமாக இருக்கும். இந்நேரத்தில் காலணி அணியாமல் நடப்பதால் பாத நரம்புகள் தூண்டப்படும். குளிர்ந்த நீரில் நீராடுவதால் இரத்த ஓட்டம் சீராகும். உடல் புத்துணர்ச்சி அடைந்து ஒரு கட்டுப்பாட்டின் கீழ் வரும். மனம் குழப்பமின்றி அமைதியாக இருக்கும். சபரிமலை ஐயப்பனுக்கு மாலை அணிந்து விரதமிருப்பவர்கள் இந்த மாதத்தில் தான் அதிகமாகக் கோயிலுக்குச் செல்கின்றனர். விரதத்தின் போது அவர்கள் காலணி அணியாமல் நடப்பதன் மூலம் சீரான உடல்நிலையை பெறுகின்றனர்.

## மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தீவக கல்விவலயத்தின் மாற்று வலுவுடையோர் தின நிகழ்வு இன்று முற்பகல் 11.00 மணியளவில் வேலணை மத்திய கல்லூரி விடுதி மண்டபத்தில் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் அன்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாக்கிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ச–7)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 151

திருக்கோவில் வழிபாடு மனித மனங்களைப் பண்படுத்தும் பயிற்சிக் களமாக அமைந்துள்ளது. இறைவன் மக்கள் குறைகளைக் கேட்கும் கோனாக அங்கு உறைகிறான். அரசு என்னும் அமைப்பு உருவான போது அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றவன் அரசன் எனப்பட்டான். மக்களைப் பராமரிப்பவன் கோ எனப்பட்டான். அவனிருக்கும் இடம் கோயில் எனப்பட்டது. இறைவன் எல்லோருக்கும் தலைவன். இறை வழிபாடு எமது பிறவிப் பிணியை நீக்குவது. உலகத்தின் துன்பங்களையெல்லாம் வெல்வதற்கு இறைவழிபாடே சிறந்த செயற்பாடாகும்.

நாயன்மார்களில் சுந்தரர் 18 வயது வரைதான் இவ்வுலகில் வாழ்ந்தார். சாதாரண பொதுவாழ்வையும் சிறப்பான அரச வாழ்வையும் அனுபவித்தவர். ஆனால், பல அல்லல்களை அனுபவித்தவர். இறைவனை வழிபட்டு அவற்றையெல்லாம் வென்றவர். அவருடைய உள்ளத்தில் திருக்கோயிலில் குடிகொண்ட இறைவன் திருக்கோலம் பதிந்தபோது பக்தியுணர்வும் தோன்றியது. இறைவனை உள்ளத்திலே வளைத்துக் கொண்டமையால் அவனை மறவாத மனம் பெற்றதாக அவர் பாடலில் குறிப்பிட்டுள்ளார். அதனால்தான் பிறவியைத் தொடராத பெருமையான நிலை பெற்றதாகக் கூறுகின்றார்.

அழகைச் சுவைக்கும் இளமைப்பருவத்தில் சுந்தரர் இறைவன் திருக்கோலத்தால் கவரப்பட்டார். கொன்றையணிந்த இறைவன் கவின் கண்டு மனம் மயங்கினார். குழையணிந்தவனைக் கரிய கண்டனைக் கண்டபோது கவிதை பாடத் தொடங்கி விட்டார். ''பாடுகின்றேன்! கூடவும் வல்லேன்'' என்ற அவருடைய திடமான கூற்று அவரது பக்தியனுபவத்தை நன்கு பறைசாற்றி நிற்கிறது. கோயிலின் புறச்சூழல் கண்டு உள்ளே சென்றதையும் அவர் சுட்டத் தவறவில்லை. கழைக்கரும்பும் கதலிப் பல சோலையும் கண்டு கழுமலவள நகருட் புகுந்த சுந்தரருக்கு இறைவனுடைய தோற்றம் மேலும் உள்ளே செல்லத் தூண்டியது. இளமை நிலையால் அழகை நாடும் உள்ளத்திலே திருக்கோலம் ஒரு மாற்றத்தைக் கொணர்ந்தது.

இந்த மனிதப் பிறவியில் துய்க்க வேண்டிய இன்பங்களைப் பற்றியே சுந்தரர் இதுவரை நினைத்து வாழ்ந்தார். கழுமலவளநகரில் அவர் பெற்ற காட்சி இன்பம் நிலையான இன்ப வாழ்வை உணர்த்தியது. இறைவனை ஒருபோதும் மறவாத கோலக் காட்சியால் மனம் தெளிவு பெற்றது. அதனால் இனிமேல் உலக இன்பங்களை நாடிச் செல்லும் மனித மனம் தேவையற்றதாகிவிடப் பக்திப் பரவசம் பெற்றார். தான் பெற்ற இறையின்பத்தை வேறு யார் பெறுகிற்பார் எனவியந்து பாடுகிறார். இறைவன் திருக்கோல அழகைப் பாடிப் பரவினால் அவன் பாதங்களில் சேரலாம் என்ற நம்பிக்கையும் எடுத்துரைக்கின்றார். சுந்தர வேடங்களைப் புனைவதில் பெருவிருப்பம் கொண்ட சுந்தரது இளமனம் இறையழகில் ஒன்றியது. அந்த அற்புதமான பக்தியனுபவத்தை எல்லா இளமையும் உணர வேண்டிப் பாடுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

*"மழைக் கரும்பும் மலர்க் கொன் றை
யினானை
வளைத்கலுற்றேன் மறவா மனம்
பெற்றேன்
பிழைத்தொரு காலினிப் போய்ப்
பிறவாமைப்
பெருமை பெற்றேன் பெற்றதார்
பெறுகிற்பார்
குழைக் கருங் கண்டனைக் கண்டு
கொள்வானே
பாடுகின்றேன் சென்று கூடவு
வல்லேன்
கழைக்கரும்புங்கதலிப்பவ சோலைக்
கழுமல வளநகர்க் கண்டு கொண்
டேனே"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம்.....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**துணுக்காய் கல்வி வலயம்**

ஏ.பொன்வாசன் (பெரிய புளியங்குளம் அ.த.க), திருமதி இ.பத்மநாதன் (துணுக்காய் கல்வி வலயம்), இ.சதீஸ்குமார்( மல்லாவி மத்திய கல்லூரி),செல்வி ஜெ.இராஜேந்திம் (மாங்குளம் மகா.வித்தி), கே.பத்மநாதன் (வன்னிவிளாங்குளம் அ.த.க), திருமதி கே.சத்தியசீலன் (மல்லாவி மத்திய கல்லூரி), செல்வி கே. சின்னத்தம்பி(புத்துவெட்டுவான் அ.த.க), திருமதி கே. மனோகரன் (யோகபுரம் மகா வித்தி),

திருமதி வினோமயூரி கிறெசியன் (மல்லாவி மத்திய கல்லூரி),திருமதி எம்.ஏ. தவராஜா (மல்லாவி மத்திய கல்லூரி),எஸ்.சத்தியசீலன் (விநாயகபுரம் அ.த.க), திருமதி எஸ். சர்வ புத்திரன் (கற்சிலைமடு அ.த.க), திருமதி எஸ். நாகேஸ்வரன் (துணுக்காய் அ.த.க) திருமதி எஸ்.ஞானதீபன் (கோட்டை கட்டியகுளம் அ.த.க.) , எஸ்.நந்தகுமார் (தெரங்கண்டல் அ.த.க.), ரி.யுகேஸ் (ஒலுமடு தமிழ் வித்தி.),திருமதி ரி.பேரின்பம் (மூன்றுமுறிப்பு அ.த.க.) ,

வி.கம லேஸ்வரன் (கற்சிலைமடு அ.த.க.), செல்வி வி. சுப்ரமணியம் (யோகபுரம் மகாவித்தி.)

**வவுனியா வடக்கு கல்வி வலயம்**

எஸ்.குலரட்ண (சுதந்திரபுரம் சரஸ்வதி வித்தி.), எஸ்.சிறிரூபன் (பம்பைமடு அ.த.க.)

**வலிகாமம்**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

**துணுக்காய் கல்வி வலயம்**

திருமதி ஏ.கணேஷமூர்த்தி (யோகபுரம் மகா வித்தி.)

**கிளிநொச்சி கல்வி வலயம்**

திருமதி பி.கிருபாகரன் (திருவையாறு மகா வித்தி.,திருமதி சி.தயானந்தன்(பூநகரி மகா வித்தி.), இ.சண்முகநாதன் (நாகேஸ்வரா வித்தி.), திருமதி ஜி.தவக்குமார் (கனகபுரம் மகாவித்தி.), திருமதி ஜி.சிவமோகன் (நாச்சிக்குடா அ.த.க.பா.), திருமதி எச்.கோகுல ராஜா (கனகபுரம் மகா வித்தி.),

**வவுனியா வடக்கு கல்வி வலயம்**

திருமதி ஜெ.சுரேஸ் (பூம்புகார்).

**முல்லைத்தீவுக் கல்வி வலயம்**

திருமதி ஜெ.உதயசீலன் (இந்து தமிழ் வித்தி.),

**துணுக்காய் கல்வி வலயம்**

திருமதி ஜெ.சிவநாதன் (தெரகண்டல் அ.த.க.),

**வவுனியா தெற்கு கல்வி வலயம்**

கெ.அருட்கரன் (வவு.தமிழ் மத்திய மகா வித்தியாலம்),

**மன்னார் கல்வி வலயம்**

கே.ரஞ்ஜித்(முருங்கன் மகா வித்தி.),

**கிளிநொச்சி கல்வி வலயம்**

திருமதி கே.ஜீவா (ஜெயபுரம் மகா வித்தி, செல்வி எம்.ஜெகதீஸ்வரன் (முழங்காவில் அ.த.க.),திருமதி எம்.செல்வராசா (ஜெயபுரம் மகா வித்தி,திருமதி எம்.சச்சிதானந்தசிவம் (சென்.பாத்திமா றோ.க.த.க), என்.செல்வராசா (ஜெயபுரம் மகா வித்தி,

**மடு கல்வி வலயம்**

திருமதி பி.பாக்கியவதி( பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தி.),

**துணுக்காய் கல்வி வலயம்**

திருமதி பி.சிவாஸ்கரன் (அனிஞ்சியன் குளம் தமிழ் மகா வித்தி.),

**கிளிநொச்சி கல்வி வலயம்**

பி.சுதாகரன் (பிரமானந்தர் நகர் மகா வித்தி),ஆர்.சங்கரன்(கனகாம்பிகைக்குளம் அ.த.க.),எஸ்.ஜீவநாதன் (கனகபுரம் மகா வித்தி),திருமதி எஸ்.ஜெயதாஸ் (கள்ளியடி அ.த.க.),திருமதி எஸ்.கணேந்திரன்,திருமுருகண்டி இந்து வித்தி.,திருமதி எஸ் .சிவநேந்திரன் (புதுமுறிப்பு அ.த.க.), செல்வி எஸ்.புலேந்திரன் (கரிபட்டமுறிப்பு அ.த.க.), எஸ்.குருசுமுத்து( மந்துவில் அரசரட்ணம் வித்தி), திருமதி எஸ்.சிறிஸ்கந்தராசா (சென். திரேசா பெண்கள் கல்லூரி),திருமதி எஸ்.இளங்குமார்( கனகபுரம் மகா வித்தியாலம்),திருமதி எஸ்.உதயகுமார்(கற்சிலைமடு அ.த.க.),

செல்வி எஸ்.பிரபாகரன் (தர்மபுரம் மகா வித்தி,

சுப்பிரமணியம் உதயசீலன் (அலம்பில் றோ.க.த.வி), திருமதி சு.மதியழகன் (இருட்டு மடு த.வி),ரி.கஜேந்திரன் (பெரியபுளியங்குளம் அ.த.க.பா),

**வவுனியா வடக்கு கல்வி வலயம்**

திருமதி ரி.காசிநாதன் (மாறாஇலுப்பை அ.த.க.பா),

**கிளிநொச்சி கல்வி வலயம்**

திருமதி ரி. சத்தியநாதன் (கனக புரம் ம.வி) செல்வி திலகவதி மயூரன் (கனகாம்பிகைக் குளம் அ.த.க.பா), திருமதி ரி.யோகநாதன் (கிளி சி.சி), திருமதி யு. விஜயரூபன் (தர்மபுரம் ம.வி), செல்வி வி.புஸ்பராணி (பெரிய குமரேசன் குளம் ம.வி), வி.உதயகுமார் (வள்ளிபுனம் அ.த.க.பா), திருமதி வி.விமலேஸ்வரன் (ஸ்கந்தபுரம் இல1 அ.த.க.பா), திருமதி வி. ஜெகதீஸ்வரன் (இந்துக்கல்லூரி),

**வடமராட்சி**

**கல்வி வலயத்திற்கு மாற்றம்**

**கிளிநொச்சி கல்வி வலயம்**

கே.முரளீதரன் (தர்மபுரம் அ.த.க.பா), திருமதி கே. அருட்பிரகாசம் (மாசார் ஜி.ரி.எம்.ஏ), திருமதி எல். விதுபாகரன் (வட்டக்கச்சி ம.வி),செல்வி மனோராணி நடராஜா (தர்மபுரம் ம.வி), திருமதி மேரிலூர்த்துநாயகி ஜீஸ்ரின் ( ஊற்றுப்புலம் றோ.க.த.க.பா),திருமதி எம்.பிரதாப் (கிளி.மத்திய கல்லூரி),திருமதி பி.நடராசா (கல்மடு நகர் அ.த.க.பா),திருமதி ஆர்.தனிநாயம்(பளை சி.சி) *(19ஆம் பக்கம் தொடரும்)*

## வயலிலிருந்த குண்டை பரிசீலிக்க முற்படுகையில் அக்குண்டு வெடித்ததில் இளைஞர் காயம்

(மன்னார்)

வவுணதீவு பகுதியில் உள்ள வயலுக்குள் கிருமிநாசினி விசிறியபோது காணப்பட்ட வெடிகுண்டினை பரிசோதிக்க முற்பட்டபோது அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயம் அடைந்துள்ளார்.

நேற்று காலை கன்னங்குடாவைச் சேர்ந்த புரன்தரன் தமது வயலுக்குள் கிருமிநாசினி விசிறிக் கொண்டிருந்த போது அங்கு கிடந்த வெடிபொருளை அகற்ற தூக்கிய போது இவ்வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள இவ்இளைஞன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில அனுமதிக்கப்பட்டுள்ளார்.(ஸ்ரீ-2)

## பெருகிவரும் பாதீனச் செடியால் விவசாய நிலங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ''பாதீனியம்'' செடி பரவலாகக் காணப்படுகிறது.

இதனை அழிப்பதற்கு பொதுமக்கள் கூடியகவனமெடுக்க வேண்டுமென கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இச்செடியானது விவசாய நிலங்களை தரமிழக்கச் செய்து வருவதுடன் இதன் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக விழிப்புணர்வு நடவடிக்கை ஏற்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2-6)

## சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கை தொழில் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் இரத்மலானை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி யாழ்ப்பாணம் ஆகியன இணைந்து நடத்திய டிப்ளோமா தர ஆங்கிலம் 2007/2008,தேசிய டிப்ளோமா தர ஆங்கிலம் 2008/2009, தேசிய சான்றிதழ் தர தொழில் நுட்பக்கல்வி ஆசிரியர் பயிற்சி 2008/2009, உயர் சான்றிதழ் தர சிங்களம் 2008 ஆகிய கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக் கான மூலச் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

உரியவர்கள் தொழில் நுட்பக்கல்லூரியில் தமது மூலச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி ந.யோகராஜன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## ஜயலத்தை துவம்சம் செய்வதற்கு பாய்ந்த ஆளுங்கட்சியினர்

### நாடாளுமன்றில் களேபரம்

(கொழும்பு)

ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சியின் ஒட்டுமொத்த சண்டித்தனத்துக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டனில் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குக் காரணம் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தான் என்று ஆளுங்கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன புதுக் கண்டுபிடிப் பொன்றை அவிழ்த்து விட்டவுடன் ஒட்டு மொத்த ஆளுங்கட்சியும் ஜயலத்தைத் துவம்சம் செய்யப் பாய்ந்து வந்தது.

பாராளுமன்றத்தில் உண்டான பெரும் அமளியை கடும்பிரயாசைப்பட்டு அடக்க முயற்சித்த சபாநாயகர் நிலைமை கை மீறிச் செல்வதை உணர்ந்து உடனடியாக பத்து நிமிடங்களுக்கு சபையை ஒத்திவைத்தார்.

அண்மையில் லண்டனுக்கு விஜயம் செய்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவே லண்டனிலுள்ள புலி ஆதரவாளர்களைத் தூண்டி விட்டு ஜனாதிபதியின் பயணத்தின் போது பிரச்சினைகளை ஏற்படுத்த வைத்ததாக ஆளுங்கட்சியினர் ஒட்டு மொத்தமாக குற்றம் சாட்டினர்.

ஆனால் தான் ஜனாதிபதியின் பயணத்தின் போது லண்டனில் இருக்கவில்லை என்று ஜயவர்த்தன சுட்டிக் காட்டியதை ஆளும் தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆளாளுக்கு முந்திக் கொண்டு தத்தம் இருக்கைகளில் இருந்து எழுந்து ஜயலத்தை நோக்கி ஓடிவந்தனர். கொஞ்சம் விட்டால் அவர் துவம்சம் செய்யப்பட்டிருப்பார். அனுர யாப்பா, ஜகத் புஷ்பகுமார,தினேஷ் குணவர்த்தன ஆகியோரே இன்று மேர்வினைத் தூக்கிச் சாப்பிடுமளவுக்கு சண்டியர்களாகி விட்டிருந்தனர்.

ஆயினும் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஓடோடி வந்து ஜயலத்தை சூழ்ந்து கொண்டதால் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் முயற்சி பலிக்கவில்லை. அதற்குள் சபையும் ஒத்திவைக்கப்பட்டு நிலைமையின் தீவிரம் தணிக்கப்பட்டது.

ஜனாதிபதி லண்டனைச் சென்றடைந்த வேளை ஜயலத்தும் அங்கிருந்தும் நிலைமைகளை சீர்குலைத்ததாக குற்றம் சாட்டிய போதிலும் கடந்த நவம்பர் 27 ஆம் திகதியே அவர் லண்டனை விட்டு இத்தாலிக்குப் புறப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## வடபகுதியில் இரண்டு பொலிஸ் நிலையங்கள் இன்று திறந்து வைப்பு

(கொழும்பு)

வடக்கில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு பொலிஸ் நிலையங்கள் இன்று திறந்து வைக்கப்படவுள்ளன. பிரதமர் டி.எம்.ஜயரட்ன பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்து வைக்கவுள்ளார்.

கிளிநொச்சி மற்றும் மாங்குளத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களே இவ்வாறு இன்று திறந்து வைக்கப்படவுள்ளன.

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் தலைமையில் இது தொடர்பான விழா நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பிரதேசங்களில் தற்காலிகமாக இயங்கிவரும் இரு பொலிஸ் நிலையங்களின் செயற்பாடுகளும் வெள்ளி முதல் புதிய பொலிஸ் நிலையங்களில் இடம்பெறவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயகொடி தெரிவித்தார்.

வட பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

## ஆலயக் கதவுகள் உடைத்து பொருட்கள் திருட்டு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பகுதியில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் திருடர்கள் புகுந்து பெறுமதியான பொருட்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சங்கரத்தைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு பூசை செய்வதற்காக பூசகர் சென்றிருந்தார்.

அவர் சென்றிருந்த போது ஆலய மூலஸ்தான கதவினைத் தவிர ஏனைய அனைத்துக் கதவுகளும் உடைக்கப்பட்டு ஆலயத்திற்குரிய ஒலி பெருக்கி சாதனங்கள், நீர்ப்பம்பி மற்றும் கடவுளருக்கு சாற்றும் பவுண் பொட்டுக்கள், பல பெறுமதியான பொருட்களும் களவாடப்பட்டிருந்ததைக் கண்டார்.

அதிர்ச்சிக்குள்ளான பூசகர் இவ்விடயத்தை அவ்வூர் மக்களுக்கு தெரியப்படுத்தியிருந்தார். இக்களவு தொடர்பாக பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்கிய அனைவரும் விசாரணைக்கு உட்படுவர்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், அவர்களுக்கு ஆதரவு வழங்கிய இலங்கை நாடாளு மன்ற உறுப்பினர்கள் மீது அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ளும் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி நாட்டில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களாகவோ அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களாகவோ நடந்துகொள்ள முடியாது.

நாட்டிலுள்ள சாதாரண பிரஜைகளைப் போன்றே அரசியல் வாதிகளும்கைதுசெய்யப்படுவர்.

நாட்டில் விடுதலைப்புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டனர். ஆனால் போருக்கு ஆதரவு தெரிவித்தவர்கள், நிதி சேகரிப்பில் ஈடுபட்டவர்கள் அனைவரும் இருக்கின்றனர். இவர்கள் தான் இலங்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

இவர்கள் அரசியல் தஞ்சம் கோரி சர்வதேச நாடுகளில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்களின் கரங்களைப் பலப்படுத்துவதற்காக நாட்டிலிருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்ற மக்களுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

இவர்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிகள், சர்வதேச முதலீடுகள் தொடர்பில் ஓரளவேனும் விருப்பம் கொள்ளாதவர்கள்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட்டில் உரை நிகழ்த்துவதற்கு தடை ஏற்படுத்தியவர்கள் என்றுநாம் இவர்களை முற்றுமுழுதாக பழி சுமத்தவில்லை. ஜனாதிபதியின் உரை இரத்துச் செய்யப்பட்டமைக்கு பாதுகாப்புக் காரணங்கள் முக்கியமானவையாகும். பிரிட்டன் அரசாங்கத்தினால் போதியளவு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இதுவே ஜனாதிபதியின் உரை இரத்துச் செய்யப்பட்டமைக்குக் காரணமாகும். எம்மால் குறிப்பிடப்படுகின்ற புலி ஆதரவாளர்கள் என்ற நபர்கள் மாவீரர் தின நிகழ்வில் கலந்து கொண்டமை குறித்து எமக்கு ஏற்கெனவேதகவல்கள்கிடைத்துள்ளன.

நாம் அது குறித்து ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே ஜனாதிபதியின் உரை இரத்துச்செய்யப்பட்டமைக்கான காரண கர்த்தாக்கள் என்ற போர்வையில் நாம் அவர்களிடம் விசாரணை ஆரம்பிக்கவில்லை. இரண்டையும் ஒன்றுபடுத்திப் பார்ப்பது தவறு என்ற குறிப்பிட்டுள்ளார். (ச-5,7)

# மழையினால் நேற்றைய ஆட்டம் பாதிப்பு மேற்கிந்தியத் தீவுகள் நிதான ஆட்டம்

(பல்லேகல)

இரண்டாம் நாள் ஆட்டமும் மழை காரணமாக தடங்கலான நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 05 விக்கெட்டுக்களையிழந்து 244 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள், ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் தீர்க்கமான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் நேற்று முன்தினம் பல்லேகலயில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியல் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிவில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம்நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி மேலதிகமாக எட்டு ஓட்டங்களை சேர்த்த போது டரன் பிராவோ 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து இணைந்த சந்தர்போல்-நாஸ் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வழங்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 200 ஓட்டங்களை எட்டியது.

இதில் சந்தர்போல் 131 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

எனினும் சந்தர்போல் 145 பந்துகளில் (03 பவுண்டரிகள் உட்பட) 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய டயானி பிராவோ பூச்சியத்துடன் வந்த வேகத்திலேயே வெளியேற மேற்கிந்தியத் தீவுகள் அணி 242 ஓட்டங்களை எடுத்து ஐந்தாவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து பயோ களமிறங்க நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளைக்கு ஒருமணிநேரம் முன்பாக ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து மழை குறிக்கீடு செய்யஇருமணிநேரத்திற்கும்மேலாக ஆட்டம் தாமதமானது இந்நிலையில் இரண்டாம் நாளாட்டம் நிறுத்தப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர்.



இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 05 விக்கெட்டுக்களையிழந்து 244 ஓட்டங்களை எடுத்தது.

இதில் நாஸ் 62 ஓட்டங்களுடனும், பயோ ஓட்டமெதனையும் ஆரம்பிக்காத நிலையிலும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் மெண்டிஸ் 02 விக்கெட்டுக்களையும் லக்மல், பெர்னான்டோ, ஹேரத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் மூன்றாம் நாளாட்டம் இன்றாகும்.

இப்போட்டி இரண்டுநாள் ஆட்டம் மழையினால் பாதித்த நிலையில் மீதமுள்ள மூன்று நாள் ஆட்டம் மழை குறிக்கீடாவிட்டால் அமைதியாக அமையும்.

# அமைச்சர் டக்ளஸ் யாழ்ப்பாண அரசன் ஆனால் அபிவிருத்திப் பணி எனக்குரியது

## அமைச்சர் பஸில் மன்றில் உரை

வடக்கு மக்களின் பிரதிநிதியாக இருக்கின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தின் அரசன். இருப்பினும் வடக் கின் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் அவருக்குரியது அல்ல. அது எனது அமைச் சுக்கே உரியது என்று பொருளாதார அபிவி ருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாம் நாள் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பி.சுனில் ஹந்துன்நெத்தி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அதிகாரங்களை அதிகப்படுத்தி வடக்கின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஒப்படையுங்கள் எனக் கூறினார். இதனையடுத்தே பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக தமது உரையில் கூறிய சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு மிகவும் குறைந்தளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது அதிகாரங்களும் குறைந் தளவிலேயே காணப்படுகின்றன. இந்தக் குறைந் தளவிலான நிதியை வைத்து அவர் எவ்வாறு வடக்கை அபிவிருத்தி செய்வார் எனக் கேட்டார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தில் அரசனாக இருக்கிறார். அத்துடன் வடக்கு மக்களின் பிரதிநிதியாகவும் உள்ளார்.

ஆனாலும் வடக்கின் அபிவிருத்தி அவருக்கு சொந்தமானதல்ல. அந்தப் பணிகள் எனது அமைச்சின் கீழேயே வருகின்றன. சகல பகுதிகளினதும் அபிவிருத்திக்கு நானே பொறுப்பு. சகல மாவட்டங்களிலும் உள்ள பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் மக்கள் சபை ஊடாக அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (எ-1)

# யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம்...

திருமதி ஆர்.இராஜகுமார் (கனகபுரம் ம.வி), செல்வி ரஞ்சினி தேவி சிவசபேசன் (தர்மபுரம் ம.வி), திருமதி ஆர்.மதீஸ்வரன் (கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை), திருமதி எஸ். சிறிக்காந்தன் (பளை றோ.க.த.க. பாடசாலை), சீனித்தம்பி புஸ்பராஜா (பாரதி வித்தியாலயம்), திருமதி எஸ்.சுந்தரலிங்கம் (பாரதி வித்தியாலயம்), திருமதி எஸ்.பாஸ்கரன் (முழங்காவில் ம.வி), தவராஜா பிரதாப் (சிவபாத கலாயகம் அ.த.க. பாடசாலை), திருமதி வி.புஸ்பராஜா (கனகபுரம் ம.வி).

**மடு**

செல்வி கௌரி மகேஸ்வரன் (அடம்பன் ம.வி), திருமதி கே.அன்ரன் சிங்கராஜா (வெள்ளாங்குளம் அ.த.க.பாடசாலை), குண்டுமணி மனோகரன் (அடம்பன் ம.வி), திருமதி ஆர்.சுகந்தன் (ஆத்துமோட்டை அ.த.க.பாடசாலை), எஸ்.கார் மேகவண்ணன் (துட்சனா மருதமடு அ.த.க.பாடசாலை), எஸ்.சிறிக்கந்தசேகரம் (சின்னவலாயன் கட்டு அ.த.க.பாடசாலை), சோமானந்தன் சிவநேஸ்வரன் தேவன்பிட்டி றோ.க.த.க.பாடசாலை), எஸ்.சுகந்தி (அடம்பன் ம.வி).

**மன்னார்**

என்.துஸ்யந்தன் (மன்னார் அல் அசார் வித்தி.

**முல்லைத்தீவு**

ஏ.குணநேசன் (முல்லைத்தீவு ம.வி), ப.பாரதி (நெத்தலியாறு த.வித்தி), கே.கிருஷ்ணலதா (உடையார் கட்டு ம.வித்தி), ஜே.நேசமலர் (புதுக்குடியிருப்பு ம.கல்லூரி), இ.சிவமணி (தேவிபுரம் ம.வித்தி, எஸ்.சிறிலக்சுமி (முல்.பாரதி வித்தி).

**துணுக்காய்**

எஸ்.ஜெகப்பிரதாபன் (முத்தையன் கட்டு அ.த.க.பாடசாலை), ஏ. உருத்திரதேவி (கற்சிலை மடு அ.த.க.பாடசாலை), ஆர்.உதயமலர் (துணுக்காய் அ.த.க.பாடசாலை), கே.வசந்தமலர் (முல்லைத்தீவு மத்தியகல்லூரி).

**வவுனியா தெற்கு**

ஆர்.சர்மிலா (வவு.சிதம்பரம் நாகராஜ வித்தி.

## தென்மராட்சிக் கல்வி வலயம்

**கிளிநொச்சி**

க.மஞ்சுளா (பூநகரி ம.வித்தி), யே.மேரிமாக்றெற்அஞ்சலெஸ்(சென். தெரேசா ம.கல்லூரி), கே.நந்தகுமாரி (இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை), ஆர்.நந்தகுமாரி (கிளி. மசார் அ.த.க.பாடசாலை), யே.ரஜனி (பரந்தன் ம.வித்தி), ஆர்.ராணிமலர் (வட்டக்கச்சி ம.வித்தி), எஸ்.தனபாலசிங்கம் (புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா வித்தி), பி.அபரஜிதன் (பண்ணக்கட்டு இ.த.க.பாடசாலை), க.தயாநிதி (மசார் அ.த.க.பாடசாலை), க.தேவகி (கிளி.ம.கல்லூரி), தே.வளர்மதி (பரந்தன் குமரபுரம் இ.ம.வித்தி), வி.பிரபாகரன் (அக்கிராயன் அ.த.க. பாடசாலை), பா.யசோதா (இராமநாதபுரம் வித்தி.

**மடு**

சி.புனிதநிதி (தேவன் பிட்டி அ.த.க.பாடசாலை), த.விக்னேஸ்வரி (வெள்ளாண் குளம் அ.த.க.பாடசாலை).

**துணுக்காய்**

சு.வேலாயுதநாதன் (துணுக்காய் கல்வி வலயம்), வி.நிமலாதேவி (ஒட்டிசுட்டான் ம.வித்தி), பி.ரஜனி (தேரன்கண்டல் அ.த.க.பாடசாலை), பு.சிறிஸ்வரி (மல்லாவி ம.க).

**வவுனியா வடக்கு**

வை.பிரேம்குமார் (பண்டிகுடியிரு ப்பு அ.த.க.பாடசாலை).

## தீவக வலயம்

**கிளிநொச்சி**

ஜீ.லூசியா (கிளிநொச்சி ம.வித்தி), ஆர் புஸ்பமலர் (அக்கிராசன் அ.த.க.பாடசாலை), எஸ்.கபிலராணி (கரியானி நாகபடுவான் அ.த.க.பாடசாலை), ஆர்.சிவநேஸ்வரி (கும்பிகை அ.த.க.பாடசாலை), கே.சுகந்தினி (மல்லாவி ம.வி). (ச)

# 2018 உலகக்கிண்ண கால்பந்தாட்டம் ரஷ்யாவில்; 2022 ஆம் ஆண்டில் கட்டாரில்

2018 ஆம் ஆண்டிற்கான உலகக்கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்கான உரிமைகளை ரஷ்யா வென்றுள்ளது.

சுவிட்ஸர்லாந்து தலைநகர் சூரிச்சிலுள்ள சர்வதேச கால்ப்பந்தாட்டச் சம்மேளனத்தின் (பீபா) தலைமையகத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ரஷ்யா வெற்றிபெற்றுள்ளது.

இப் போட்டிகளை நடத்துவதற்கு ரஷ்யாவுடன் இங்கிலாந்தும் போட்டியிட்டது. அதேவேளை இப்போட்டிகளை இணைந்து நடத்துவதற்கு ஸ்பெயின்- போர்த்துக்கல் முயற்சித்தன. இதேபோல் நெதர்லாந்து-பெல்ஜியம் ஆகியனவும் இணைந்து நடத்த முயற்சித்தன.

இவற்றில் ரஷ்யா தெரிவுசெய்யப்பட்டதாக பீபா தலைவர் ஸெப் பிளாட்டர் நேற்று அறிவித்தார்.

இதேவேளை 2022 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்கான அனுமதியை மத்திய கிழக்கு நாடான கட்டார் பெற்றுள்ளது.

அமெரிக்கா, தென்கொரியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகியனவும் 2022 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்தும் உரிமையைப் பெறுவதற்கு கடுமையாக முயற்சித்தன.

எனினும் நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் கட்டார் வெற்றியீட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக...

லண்டனில் ஒக்ஸ்போர்ட் யூனியன் ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 30ஆம் திகதி இலங்கையிலிருந்து லண்டன் நோக்கி புறப்பட்டார்.

அங்கு ஜனாதிபதி சென்றபோது, புலம்பெயர் தமிழர்கள் விமான நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் ஜனாதிபதியை போர்க்குற்ற விசாரணைக்காக கைது செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் ஜனாதிபதியை பிரித்தானிய பொலிஸார் பாதுகாப்பாக அழைத்துச் சென்று மத்திய லண்டனிலுள்ள பார்க் ரோட் ரோச்செஸ்டர் ஆடம்பர விடுதியில் தங்க வைத்தனர்.

அங்கு தங்கியிருந்த ஜனாதிபதி நேற்று ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரை நிகழ்த்தவிருந்த போதிலும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவ் உரையும் ரத்து செய்யப்பட்டது.

இதனையடுத்து நேற்றிரவு ஜனாதிபதி இலங்கைக்கு திரும்பவிருந்த நிலையில் அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு முன்பாக சுமார் 50 ஆயிரம் பேர் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பிரித்தானியாவுக்கான இலங்கை தூதரகம், விமான நிலையம் என்பவற்றுக்கு முன்பாகவும் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற மூன்று இடங்களிலும் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் ஜனாதிபதிக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்பாக விமான நிலையத்தை சென்றடைந்ததாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்த போதிலும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (எ-5,7)

# பிரிட்டனில் இடம்பெறும்...

கலைக்கழக உரை இரத்துச் செய்யப்பட்டமைக்கும் பிரித்தானிய அரசாங்கத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை எனவும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்கள் இலங்கை அரசாங்கத்துக்கோ இலங்கை மக்களுக்கோ விடுவிக்கப்பட்ட அச்சுறுத்தலாக எடுத்துக் கொள்ள முடியாது.

இவ் அச்சுறுத்தல்கள் பிரித்தானியாவில் பரந்துபட்டு வாழ்கின்ற ஒரு கௌரவமான மக்களுக்கு விடுவிக்கப்படுகின்ற அச்சுறுத்தல்தான்.

ஜனாதிபதி பிரிட்டன் வருகை தந்தமையானது அரசியல் நடவடிக்கைகள் பற்றி விபரிப்பதற்காகவே. இதனை விரும்பாதவர்கள் எதிர்த்து தமது கேள்விகளை முன்வைத்திருக்கலாம். இதைவிடுத்து மாபெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமை தவறு.

இச் செயற்பாடு ஒட்டுமொத்தமாக கருத்துச் சுதந்திரத்திற்கு முரணானது. இலங்கையில் கருத்துச் சுதந்திரம் மீறப்பட்டமை உண் மைதான். ஜனநாயகத்திற்கு எதிரான கருத்து வெளிப்பாடுகளின் போது கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

சர்வதேச மட்டத்தில் இலங்கை மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தி வருபவர்கள் எமது அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவில் தமது சாட்சியங்களை பதிவு செய்யலாம்.

அதைவிடுத்து சர்வதேச ரீதியில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்துவது தவறாகும்.

இச் செயற்பாடானது ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு மேற்கொள்கின்ற காலனித்துவ ஆட்சியையே வெளிப்படுத்துகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நாட்டினுடைய சூழ்நிலைகளுக்கேற்ப இலங்கையிலேயே மேற்கொள்வதே சிறந்தது.

நாட்டிற்கு சர்வதேச ரீதியில் பெறப்படும் நலன்சார்ந்த சந்தர்ப்பங்களிலே அவற்றைத் தடுத்து நிறுத்து முகமாகவே இச் சர்வதேச ரீதியிலான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை தொடர்பான கால கட்டங்களில் சனல் 4 தொலைக்காட்சி பொய்யான தகவல்களை வெளிப்படுத்தி அவற்றை தடுத்து நிறுத்தியது.

அதேபோன்று தற்போது ஜனாதிபதி பிரித்தானியா நோக்கி வருகை தந்தபோது மேற்கொள்ளப்படும் ஆர்ப்பார்ட்டங்கள் சர்வதேச ரீதியாக இலங்கை நலனில் பாதிப்பு ஏற்படுத்தும். இவை அனைத்தும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற பழிவாங்கல் நடவடிக்கைகளே என்று குறிப்பிட்டுள்ளார். (ச-7)

# இரணைமடுவில்...

நேற்று மாலை வரை விடுவிக்கப்படவில்லை.

சாந்தபுரம், இந்துபுரம், செல்வபுரம், திருமுருகண்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் இரணைமடு குளத்தில் நன்னீர் மீன்பிடிப்பை நம்பியே கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வாழ்கின்றனர்.

மீள்குடியேற்றம் நடந்து ஏழு மாதங்கள் கடந்துள்ள போதும் இப் பகுதியில் மீன் பிடிப்பதற்கான அனுமதி இராணுவத்தினரால் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் நன்னீர் மீன்பிடிப்புக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மீன்பிடிக்கான அனுமதி வழங்கப்படாத நிலையில் வாழ்வாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மீனவர்களே மீன்பிழக்கச் சென்றதாக மக்கள் கூறுகின்றனர். (ச-5,7)

# இடமாற்றம் பெறும்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற் றும் ஆசிரியர்களில் 2010ஆம் ஆண்டு மாவட்டங்களுக்கிடையில் இடம்மாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றப்பட்டியல் மீளாய்வு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் விபரங்கள் சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கு தற்போது கடமையாற்றும் கல்வி அலுவலகங்கள் 2010 டிசம்பர் 31ஆம் திகதியுடன் விடுவிக்கப்படுவதாக கடிதம்மூலம் அறிவிக்கும்.

அதேவேளை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள வலயக் கல்வி அலுவலங்கள் உரிய ஆசிரியர்களுக்கு பாடசாலையை ஒதுக்கி 2011ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் கடமையைப் பொறுப்பேற்பதற்கான கடிதத்தினை வழங்குவார்கள். இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித் தார். (ச-5)

# லியாம் பொக்...

பகிர்வுடனான தீர்வொன்றை வழங்குவது தொடர்பில், இலங்கையின் தமிழ் கட்சிகளுடன் தாம் பேச்சு நடத்திவருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வட மாகாணம் உள்ளிட்ட பல உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்தி வருகின்ற புதிய அரசியல் தலைமைகளுடனும் இது தொடர்பில் பேச்சு நடத்தி தீர்மானத் தை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை இலங்கையின் உட்கட்டுமான அபிவிருத்திக்கான தேவைகள் மற்றும் பிரித்தானியாவினால் வழங்கப்படுகின்ற உதவிகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (ச-5,7)

# இலங்கை போர் குற்ற...

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் இப்படுகொலைகளுக்கு பெருமளவில் பொறுப்பு வகிப்பது இப் படுகொலைகள் குறித்த விசாரணைகள் பெருமளவு முன்னேற்றம் இன்றி இருப்பதற்கு காரணம் எனக் கூறியுள்ளார்.

பதவியில் தொடர்ந்து நீடித்திருக்கும் ஒரு அரசு அல்லது ஒரு ஆட்சிக்குழு தனது இராணுவ அதிகாரிகளும் மேற்கொண்ட போர்க் குற்றங்கள் குறித்து தாமே ஒரு முழுமையான விசாரணைகளை மேற்கொண்டதற்கு நான் அறிந்த வரை உதாரணங்கள்ஏதுமில்லைஎனஅமெரிக்க தூதுவர் இக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இவ் விடயம் மேலும் சிக்கலாக இருப்பதற்கு காரணம் நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரர்கள், எதிரணி வேட்பாளர் (ஜனவரி 2010) சரத் பொன்சேகா மற்றும் பல மூத்த அதிகாரிகள் இப் போர் குற்றச்சாட்டுகளில் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதுதான். இதில் சரத் பொன்சேகா ஊழல் குற்றச்சாட்டில் தற்போது இராணுவ நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

இப் போரில் பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியமை போன்ற போர்க் குற்றச்சாட்டுக்களை விடுதலைப் புலிகள் மீதும் சுமத்தப்பட்டுள்ளபோதும் இவர்களின் பல மூத்த தளபதிகள் சண்டையின் இறுதியில் கொல்லப்பட்டுவிட்டனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நாட்டில் யுத்த வீரர்களை சர்வதேச விசாரணைகளுக்கும் உட்படுத்த விடமாட்டேன் என தனது தேர்தல் பிரசாரத்தின்போது கூறியிருந்தார்.

இலங்கை அரசு மட்டுமன்றி இலங்கையில் உள்ள தமிழர்களும் அரசாங்கத்தின் பழிவாங்கல்களுக்கு உள்ளாகலாம் என்ற பயத்தில் இப்பிரச்சினைகள் தொடர்பாக ஆர்வம் இன்றியே உள்ளனர். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மட்டுமே இப் பிரச்சினைகளையிட்டுப் பேசிவருகின்றனர்.

நாம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள தமிழ்த் தலைவர்களுடன் உரையாடிய அளவில், இப்பிரச்சினையையிட்டு இப்போது பேசுவது தமக்கு ஆபத்தாக முடியும் என்பதால் மௌனமாக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் எதிர்காலத்தில் இப் போர்க் குற்ற விடயங்களையிட்டு ஏதாவது செய்ய முடியும் என்பதால் இப்பிரச்சினையை அணையாது வைத்திருக்கவே விரும்புகின்றனர்.

எனினும் இந்த விடயங்களுக்குப் பதில் சொல்ல வேண்டியது இலங்கை சமூகத்தின் ஒட்டுமொத்த அரசியல் மற்றும் சமூக நீதிக்கு அவசியமானது. ஆனாலும் இம்மாற்றம் உடனடியாக நடந்து விடும் என நான் நம்பவில்லை என அவர் தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் இணையம் தெரிவித்துள்ளது. (ச-5,7)

# இத்தாலியில்...

வும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன குற்றம் சுமத்தினார்.

எனினும் அந்தக் குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் இல்லை என்றும் கடவுச்சீட்டை ஆதாரமாக காட்ட தயாரெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (எ-5)

# புலிகளின் தளபதி...

அனுசரணையுடன் வெள்ளைக் கொடியை பிடித்தவாறு படைத்தரப்பிடம் சரணடையச் சென்றபோது சுட்டுக்கொல்லப்பட்டதாக குற்றம்சாட்டப்பட்டது.

இவர்களுள் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு தளபதி ரமேஷும் ஒருவர் என அப்போது செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால் தற்போது வெளியாகியுள்ள வீடியோ ஆதாரத்தில் ரமேஷ் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இவர் ஒரு கேள்விக்கு, அப்போது தான் மட்டக்களப்பில் நின்றதாக குறிப்பிட, பொய் சொல்வதாக படைத்தரப்பால் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மொழிப் பிரச்சினையால் அவர் படையினரின் கேள்விகளுக்கு உரிய பதிலளிக்க முடியாமல் தவிப்பதையும் அவ் வீடியோக் காட்சியில் காணக்கூடியதாகஇருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது. (எ-5)

MyWay English ஆங்கில பயிற்சிநெறி
Grammar Computer இலக்கண கற்றல் மூலமோ கணினி வழி கல்வி மூலமோ ஆங்கிலத்தினை பேச முடியாது
பேசுதல் என்பது வசனங்களை உருவாக்குவதோ அல்லது மொழி மாற்றுவதோ இல்லை
தமிழ் தொடர்பில்லாத Channel இனை உருவாக்குவதன் மூலம்
ஆங்கிலத்தில் ஒரு சொல்கூட தெரியாதவர்களும்
3 மாதத்தில் சரளமாக ஆங்கிலம் பேச முடியும்
ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
ஆரம்பம் : 04.12.2010 காலம் : 3 மாதங்கள்
பிரிவுகள் : 8 – 9, 10 – 11, 1 – 2, 2 - 3
(ஏதாவது ஒரு பிரிவில் பயிற்சியில் சேரலாம்)
(50% கட்டணச்சலுகையுடன் பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்)
தனியார் அலுவலர், இளைஞர் யுவதிகளுக்கு அனுமதி இல்லை
பல்கலைக்கழகம் பூர்த்திசெய்தோரும் பயிற்சியில் சேரலாம்
MyWay 182, Stanley Rd Jaffna 077 33 63 456

மாபெரும் கட்டணச்சலுகையுடன் புதியபிரிவுகள் ஆரம்பம்
Dip. in Ms Office2007 3500/= 1000/=
Dip. in Desktop Publishing 3500/= 1000/=
Dip. in Computer Hardware & Networking 5000/= 1000/=
Certificate in Internet & Email 1600/= 1000/=
கே.கே.எஸ் வீதி உப்புமடம் சந்தி அருகாமையில்
05.12.2010 முதல் அனைத்துப் பிரிவுகளும் ஆரம்பம்
கட்டணச்சலுகைகள் 05.12.2010 வரை மட்டுமே!
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

A/L 2010 ? What Next? BIT, CIMA-UK, Engineering-USA
Government Schol. நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL
SMS your name & course to 772 395 895 & Get Schol.
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும், 324, Palaly Road, Campus Junction, Jaffna.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org